# திறவுகோல்

2050 ஆடி
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.


இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# மூளையின் ரகசியங்கள்



''ஏய் உனக்கு மூளை இருக்கா?'' என்று நம்மில் பலர் கேட்டிருக்கிறோம். இனி அப்படி கேட்காதீர்கள். மூளை இல்லாவிட்டால் நாம் உயிரோடு இருக்கவே முடியாது. மூளையை பற்றிய சில சுவாரசியமான தகவல்கள் இதோ!....

✸ மனித மூளையால் எதிர்காலத்தை கணிக்க முடியும். அதனால் தான் சிலர் காணும் கனவுகள் பலிக்கிறது. இப்படி பார்க்க போனா நமக்கும் ஜோசியம் பார்க்க தெரியும் போல இருக்கே!...

✸ ஆண்கள் மூளை பெண்களின் மூளையை விட பெரியது. ஆண்கள் தான் மூளையை 10 % அதிகமாக பயன்படுத்துகிறார்கள். இதனால் தான் ஆண்கள் எந்த முடிவையும் உடனே எடுத்துவிடுகின்றனர். பெண்கள் முடிவெடுக்க சற்று தடுமாறுகின்றனர்.

✸ சரி நம்ம மூளைக்கு அதிக வேலை கொடுப்பது யாருன்னு நினைக்கிறீங்க? அது வேற யாரும் இல்ல... நம்ம கையில இருக்குற கட்டை விரல் தான்..

✸ நம்ம உடம்பிலுள்ள நரம்பு மண்டலம் தான் மூளைக்கு நிறைய தகவல்களை அனுப்புகிறது. அதாவது 1 செகண்டுக்கு 10,000, 1 நிமிடத்துக்கு 6 இலட்சத்துக்கும் மேல தகவல்களை அனுப்புகிறதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிச்சிருக்காங்க.

✸ நம்ம உடம்பில் எந்த இடத்துலயாவது சின்ன காயம் பட்ட உடனே நமக்கு வலி தெரியும். ஆனால் மூளையில் எவ்வளவு காயம் பட்டாலும் வலி தெரியாதாம். அப்படீனா மூளை அறுவை சிகிச்சை செய்யும்போது மயக்க ஊசி போட தேவையில்லை. கண்கள் திறந்துகொண்டே இருக்கலாம்.

✸ நாம் இரவில் தூங்கி நம் உடலுக்கு ஓய்வு கொடுக்கும்போது நம்ம மூளைக்கும் ஓய்வு கொடுக்கிறதாக சிலர் நினைப்பார்கள். அது தவறு. நாம் தூங்கும்போது தான் நமது மூளை சுறுசுறுப்பாக இயங்குகிறது.

✸ 40 வயதுவரை நமது மூளை வளர்ந்து கொண்டே இருக்கிறதாம்.
என்ன மூளையை பற்றி நிறைய விசியங்கள் தெரிஞ்சுகிட்டீங்களா?..... நன்றி!

## - ஆசிரியை ரோஸி

# ஒளிரும் ஆசிரியர் - 3

இயற்கையின் காவலர்களாக மாணவர்களை மாற்றி வரும் ஆசிரியர்!
அண்மைக்காலமாக உலக அரங்கில் பேசுபடு பொருளாகவும் தொடர்ந்து விவாதிக்கும் கருத்தாகவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இருந்து வருகிறது. புவி வெப்பமடைதல் உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது அனைவரும் அறிந்த ஒன்று. மரம் வளர்ப்பும் நெகிழிப் பயன்பாடுகள் தவிர்ப்பும் இதற்கு இன்றியமையாதவை ஆகும். போதிக்கும் ஆசிரியர்களை மாணவர்கள் எப்போதும் விரும்புவதில்லை. தங்கள் மனங்களைத் தலைசிறந்த வகையில் ஆகச்சிறந்த செயல்களால் பாதிக்கும் ஆசிரியர்களையே மாணவர்கள் கொண்டாடுவர்.



அத்தகைய வரிசையில் திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றியம் வெள்ளங்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி கணித பட்டதாரி ஆசிரியாகப் பணிபுரிந்து வரும் திருமிகு பெ.சோமசுந்தரம் அவர்கள் தனிமுத்திரை பதித்து வருகிறார். இவர் தற்போது பணியாற்றி வரும் வெள்ளங்கால் பகுதியானது நீர்வளம் குறைந்த பகுதிகளுள் ஒன்று. ஆகவே, விவசாயத்திலும் தொடர்ந்து இப்பகுதி பின்தங்கியே காணப்படுவதைக் கண்டு வேதனையடைந்த இவர், மாணவர்களை இயற்கையின் காவலர்களாகவும் காதலர்களாகவும் மாற்றிட பெருமுயற்சிகள் மேற்கொண்டு பசுமைப்படை ஒன்றை உருவாக்கிப் பல்வேறு பசுமைப் பாதுகாப்பு செயல்திட்டங்களை மாணவர்களுடன் இணைந்து முன்னெடுத்து வருவது பாராட்டத்தக்கது.



நிலத்தடி நீர்வளம் பாதுகாக்க, தம் பசுமைப்படை துணையுடன் 2016 - 17 முதற்கொண்டு சற்றேறக்குறைய 20,000 க்கும் மேற்பட்ட பனைவிதைகளைப் பூமியில் பதித்து வந்துள்ளது குறிப்பிடத்தக்க முன்னோடி நிகழ்வாகும். மேலும், இதன் ஒரு பகுதியாக, இக்காலகட்டத்திலிருந்து இன்று வரை சற்றேறக்குறைய 50,000 விதைப்பந்துகளை மாணவர்கள் மூலமாக உருவாக்கி, அவற்றை மழைக்காலங்களில் ஆற்று ஓடை, மணல்திட்டு போன்ற விதை முளைக்கும் இடங்களில் தாமே முன்மாதிரியாக இருந்து மாணவர்களுடன் நல்லெண்ண முயற்சியோடு அவ்விதைப்பந்துகளை வீசிவருவது உலகம் காக்கும் நற்பணியாகும்.



அதுபோல, இப்பகுதியில் நீக்கமற நிறைந்து காணப்படும் நிலத்தடி நீர் குறைவிற்கு காரணமாக விளங்கும் சீமைக்கருவேல மரங்களையும் விதைகளையும் அழித்தொழிக்கவும் இவரது பசுமைப்படை முடிவெடுத்தது. இதன் பலனாக, 2015 திசம்பரில் பத்துக் கோடிக்கும் மேற்பட்ட சீமைக்கருவேல மரச்செடிகளை மீண்டும் முளைக்காதவாறு வேருடன் பிடுங்கி அழித்தது ஒரு மாபெரும் சாதனை நிகழ்வாகும். இதுதவிர, ஊரெங்கும் கொட்டிக்கிடந்த 5 இலட்ச சீமைக்கருவேல விதைக்கொத்துக்களை முறையே சேகரித்துப் பாதுகாப்பாக அழித்தொழிப்பு செய்ததும் போற்றத்தக்க செம்மைப்பணி ஆகும். பூமிக்குக் கேடுகள் விளைவிக்கும் இச்சீமைக் கருவேல மரச்செடிகளை தம்மைச் சுற்றியுள்ள பகுதிகளில் மீளவும் முளைவிடாதிருக்க மாணவர்களை முடுக்கித் தொடர்ந்து இயங்க வைத்து வருவதென்பது பயனுள்ள தொடர்பணியாகும் எனலாம்.



தம்மிடம் படிக்கும் மாணவர்களைச் சிறந்த குடிமக்களாக உருவாக்கும் பொருட்டு, அவர்களை இளையோர் செஞ்சிலுவை சங்க உறுப்பினர்களாக்கிப் பல்வேறு சமுதாய பணிகளில் இளம் வயதிலேயே ஈடுபடுத்தி வருவதென்பது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் ஊர் மக்களிடையே சீமைக்கருவேல மர ஒழிப்பு, நெகிழிப் பயன்பாடுகள் தவிர்ப்பு, நூறு விழுக்காடு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவது பலரும் பாராட்டி மகிழும் செய்கைகளாவன.



மேலும், பள்ளி மாணவர்கள் தம் கற்றலுக்குத் தேவையான குறிப்பேடுகள், எழுதுபொருள்கள் உள்ளிட்டவற்றிற்காக நெடுந்தொலைவு சென்று வாங்குவது பெரும் சிரமமாக அவர்களுக்கு இருப்பதை உணர்ந்து, பள்ளியில் மாணவர் அங்காடி ஒன்றை நிறுவியும் மாணவர்களையே அதை நிர்வகிக்க வைத்தும் தீர்வு கண்டார். இதற்கு உறுதுணையாக ரூ.7000/= மதிப்பில் இரும்பு அலமாரி ஒன்றும் ரூ.10000/= மதிப்பிலான கற்றல் பொருள்களும் வாங்கித் தந்து உதவினார். ஆண்டு முடிவில் வரவு செலவு அறிக்கை வாசிக்கப்பெற்று கிடைக்கும் இலாபத்தைச் சமமாகப் பங்கிட்டு மாணவர்களுக்கு வழங்கி வருவது கூடுதல் சிறப்பாகும்.

பொதுவாக கணிதப் பாடம் என்பது மாணவர்களிடையே சற்று கசப்பை ஏற்படுத்துவதாகவே காணப்படும். இவர் தம் தனித்துவம் மிக்க கற்பிப்பு முறைகளால் கசக்கும்

கணிதத்தைக் கற்கண்டாக்கி வருகிறார். சான்றாக, எளிதில் புரிந்து கொள்ள முடியாத கணிதக் கருத்துக்களைப் பல்வேறு துணைக்கருவிகள் உதவியுடன் தாமே செய்து கற்றல் முறையில் மாணவர்களிடையே எளிதில் புரிய வைக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கதாக உள்ளன.



மாணவர்களை வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் புகுத்தாமல் இயற்கையின் மீது தீராத பற்றும் சமூகத்தின் மீது பேரன்பும் மிக்க மாமனிதர்களாக உருவாக்கி வரும் ஆசிரியர் பெ. சோமசுந்தரம் என்பார் ஓர் ஒளிரும் ஆசிரியர் என்பதில் ஐயமுண்டோ?

தொடர்வார்கள்...

– முனைவர் மணி.கணேசன்

# தண்ணீர் தண்ணீர்!

தண்ணீர்
இயற்கையின் கொடையிது!
இங்கே -
ஆற்றில் மணல் இல்லை!
நிழலுக்கு மரமில்லை!
பருவ மழையில்லை !
கதறி அழ
கண்களிலே நீருமில்லை!

மழை காலத்தில்
தெருவெல்லாம் பெருவெள்ளம்
போனபோதும் -
நீரை சேமிக்க
இங்கே திட்டமும் இல்லை!

கோடையில் இன்று...
தெருவெல்லாம் குடம் வைத்துத்
தேடுகிறோம்
குடிநீர் வாகனத்தை!
தண்ணீர் வாகனம் வரவில்லை,
இங்கே -
தவிக்கும் வாய்க்கு
தண்ணீர் இல்லை!

ஆறுகள் இங்கே,
பலகோடி விலைப் போனது!
ஆழமாக மணல் அள்ள
மலடானது!

எல்லாமும் இங்கே கார்ப்பரேட்டின்
வசமானது,
தலைநகரின் நிலையோ
இன்று
சோகத்தில்
தடுமாறுது!

நன்னீரைத் தொலைத்து
கண்ணீரில் கரையும்
மானுட இனம் நாம்!

இயற்கையின் போக்கை மாற்றி
இரண்டகம் செய்யும் வஞ்சக
வன்முறை!

நீருக்காய் போர் செய்யும்
நாட்கள்..
விரைவில்!

தண்ணீரைக் காத்திட
மாநிலம் கடந்து
கை கோர்ப்போம்!

நாளைய சமுதாயம்
காக்க இன்றே
முயலுவோம்!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# என் மகள் (கதை - பகுதி 3)

’ சொன்னா மாதிரி கரைட்டா வந்துட்டிங்களா சார்.’ முத்து வீட்டுக்காரரை வரவேற்று நின்றான்.

’ நான் வர்றது இருக்கட்டும். இந்த நேரத்துல இப்படி கூப்பிட்டிருக்கியே, அப்படி என்னப்பா உனக்கு அவசரம்.?’ வீட்டுக்காரர் தூக்கி எரிந்து பேசினார்.

’ அது ஒன்னுமில்ல சார். வீட்டோட முக்கால்வாசி வேலை முடிஞ்சிடுச்சி. அந்த கடைசி ரூம்தான் பாக்கி. அப்புறம் ஒன்னு தெரியனும்.’

’ என்ன.?’

’ அதாவது சார், நம்ம வீட்டு செவுத்துல பெயிண்ட் சுண்ணாம்பெல்லாம் அடிக்கும்போது சில இடங்கள்ல, போட்டோ மாட்டியிருந்த அச்சு இருந்தது. போட்டோல்லாம் எங்கயாவது எடுத்து வச்சிருப்பாங்கனு நானும் விட்டுட்டேன். கடைசில அந்த போட்டோ எதுவும் இல்லனு தெரிஞ்சிச்சி. அதான் என்னாச்சினு கேட்டேன். வேற ஒன்னுமில்ல சார்.’ பவ்வியமாக சொன்னான் முத்து.

’ அதெல்லாம் உனக்கெதுக்கு.?’ கையும் சேர்ந்து கேள்வி கேட்டது.

’ இல்ல சார், போட்டோலாம் இல்லன்னா வேலய முடிக்காததுபோல இருக்கும். இருந்தா, அப்படியே மாட்டி விட்டுட்டு, வேலையை கனக்கச்சிதமா முடிச்சிடலாம் பாருங்க. அதான்.’ அர்த்தப்பூர்வ விளக்கம் கொடுத்தான் முத்து.

வீட்டுக்காரர் ஏற இறங்க முத்துவைப் பார்த்தார். இவனல்லாம் கேள்வி கேக்க வந்துட்டான் பாரு என்று மனதில் நினைப்பது முகத்தில் தெரிந்தது. முத்து அதை நன்றாகப் புரிந்துக்கொண்டான்.

’ சரி, வேற எதுனா உனக்கு வேணுமா சொல்லு. நான் கௌம்புனும்.’ வீட்டுக்காரர் பட்டெனக் கேட்டார்.

’ போட்டோ வேணும் சார். வேற ஒன்னுமில்ல.’ சிறிய புன்னகையோடு கேட்டான் முத்து.

’ அட.! அதப்பத்தியெல்லாம் நீ கேக்கக்கூடாது. வேலைக்கு எதுனா வேணுமா சொல்லு. ஏற்பாடு பண்ணிடலாம். வேற எதுவும் கேக்காத.’ கரார் கண்டிசனாக பேசினார்

வீட்டுக்காரர். சில நொடிகள் அமைதியாக இருந்த முத்துவைப் பார்த்துவிட்டு கிளம்ப எண்ணினார். திரும்பும்போது முத்து ஒன்று சொன்னான். அதைக்கேட்டு திடுக்கிட்டார்.
’ என்ன சொன்ன.?’ திரும்பிய வேகத்தில் கேட்டார்.

’ அது உங்கப் பொண்ணோட போட்டோதான.?’ கிடுக்குப்பிடி கேள்வியாய் இருந்ததால் அவரால் பதில் சொல்வதிலிருந்து தப்ப முடியவில்லை.
’ உங்க மகள்தானே.?’ முத்து மீண்டும் கேட்டான். அவன் குரலில் அழுத்தம் கிளம்பியவரை நிறுத்தியது.

’ இல்லையே. உனக்கு யார் சொன்னது.?’ கண்கள் விரியக் கேட்டார்.
’ அட சார், பதறாதிங்க. நீங்க ரெண்டுபேரும் பெரியவங்க. உங்களுக்கு ஒரு பொண்ணோ பையனோ இருப்பாங்கனு கேட்டேன், அவ்வளவுதான்.’ அவனது கேள்வியில் நிறைய அர்த்தங்கள் பொதிந்திருந்தன என்பதை வீட்டுக்காரரால் சிறிதுதான் உணர முடிந்தது. இதைக் கவனித்த முத்து மேற்கொண்டு அவரை யோசிக்க விடாமல் தடுக்க எண்ணினான்.

’ அதாவது சார், வீட்டுல உங்க ரெண்டுபேரையும் நான் பாத்திருக்கேன். ஆனா உங்க பசங்க யாரையும் பாத்ததில்ல. அதான் கேட்டேன்.’ சாதாரணமான சூழலில் பேசுவதுபோல் சொன்னான் முத்து.

’ எனக்கு மகன்தான் இருக்கான். பொண்ணெல்லாம் இல்ல.’ பார்வையை அலையவிட்டுக்கொண்டு சொன்னார். வீட்டுக்காரர்.

’ மகனா.? மகன் எதுக்கு சார் பொண்ணுங்க துணியை வச்சிருக்கான்.?’ அடுத்த கேள்வியைத் தூக்கிப்போட்டான் முத்து.

’ இந்தாப்பா அவன் எதுக்கோ வச்சிருக்கான். அதப்பத்தியெல்லாம் நீ ஏம்பா கேக்குற.? இதான் உனக்கு வேலையா.?’ வெட்டிப் பேசினார்.

’ இல்லங்க சார், அந்த மேல் ரூம்ல, பாத்ரூமெல்லாம் பொட்டுங்க ஒட்டியிருந்ததைப் பாத்தேன். ரொம்ப நாளா ஒட்டியிருந்தது போலருந்தது. அப்புறம், சில மூட்டையில பொண்ணுங்க துணியையும் பாத்தேன். மகள் இருந்தாங்களோனு ஒரு டவுட்டு.? அதான் சார் கேட்டேன்.’ அப்பாவியாக சொன்னான்.

’ மொதல்ல உன் காண்ட்ராக்ட்ட கேன்சல் பண்றேன். அப்புறம் எப்படி கேள்வி கேக்குறனு பாக்கலாம்.’ சொல்லிக்கொண்டே அவ்விடத்தை விட்டு நகர்ந்தபோதே முத்து கேட்டான்.

’ அவங்க எங்க சார்.?’ நிதானமாக ஆனால் இறுக்கத்தோடு கேட்டான் முத்து.

சென்றுக் கொண்டிருந்தவர் ஒரு நொடி ஸ்தம்பித்து நின்றார்.

’ யாரு.?’
’ உங்க மகதான்..’ சாதாரணமாகவே சொன்னான்.
’ அவன் எங்கருந்தாலும் உனக்கென்ன.? ம்.?’

’ அதில்ல சார், உங்க வாரிசு எங்கனு வேற ஒருத்தர்கிட்டபோய் கேக்குறதுக்கு உங்க வாயாலயே கேட்டுடலாம்னுதான் சார்.

’ வேற ஒருத்தர்கிட்ட கேப்பியா.? மெதுவாக சொல்லிக்கொண்டார் வீட்டுக்காரர்.

’ முத்து, இங்க வா.’ முத்துவிடம் நகர்ந்து சென்றார். ’ என்னய்யா உனக்கு வேணும்.? ஏன் உனக்கு இந்த வில்லங்கமெல்லாம்.? வந்தமா, வேலையப் பாத்தமா, காச வாங்கனமான்னு இருக்கனும். அதவிட்டுட்டு அடுத்தவங்க குடும்பத்தப் பத்தி யோசிக்காத. அப்படி நீ இருந்துக்கிட்டா.. நல்லது.’ இதைக்கேட்டு முத்து பயந்ததுபோல பாவம்காட்ட, இன்னும் கொஞ்சம் மிரட்ட தோன்றியது வீட்டுக்காரருக்கு.

’ அப்படி இல்லன்னு வை.. உனக்கு நல்லதில்ல. பாத்துக்கோ.’ முத்து உடனே வாய்மேல் கை வைத்து மூடிக் கொண்டான். ’ ஆமா அப்படி இருக்கனும்,’ என்று நாசுக்காக சொல்லிவிட்டு மீண்டும் கிளம்ப எண்ணி நகர்ந்தார்.

’ பொண்ணு எங்க இருக்கு.?’ பட்டென கேட்டான் முத்து. சென்றவர் மீண்டும் நின்றார். சிறிது நேரம் அவனையே பார்த்துவிட்டு அருகில் வந்தார். பட்டென கன்னத்தில் அறைந்தார். முத்து தலை குனிந்தபடி மேற்கொண்டு பேசாமல் நின்றான். குளிர்ந்த காற்றின் வீசம் அரைந்த வலியை குறைக்க உதவியது. வெளியில் மரங்கள் அசையும் சத்தம் வெளியே மழை பெய்கிறதோ என்று எண்ண வைத்தது. சிறிது நேரம் கடந்து போனது.

’ இங்க வா முத்து. வா.’ வீட்டுக்காரர் முத்துவை அழைத்துக் கொண்டு, வீட்டின் நடுவில் கூடத்திற்கு சென்றார். இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். வீட்டுக்காரர் பேச ஆரம்பித்தார்.

’ இங்க பாரு. நீ இன்னிக்கி என்னன்னமோ கேள்வியெல்லாம் கேட்டுகிட்டிருக்க. அதுக்கும் உனக்கும் எந்த சம்பந்தமுமில்ல. ஆனால் நீ கேக்குற. எதுக்கு.?’ முத்து அமைதியாக இருந்தான்.

’ பத்திரிக்கையா.? டிவி சேனலா.? இல்ல போலீசா.? எதுவா இருந்தாலும் சரி. என்ன இப்படியெல்லாம் கேள்வி கேக்கக்கூடாது. ஆனாலும் நீ கேட்டுட்ட. சரி. பரவாயில்ல. நான் தப்பா நெனைக்கல.ஆனா எதுக்கு கேக்குற.?’ வீட்டுக்காரர்

இப்போது தணிவாகக் கேட்டார். முத்து அப்படி இப்படி பார்த்துவிட்டு மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

’ அப்படியெல்லாம் ஒன்னுமில்லங்க சார். நான் ஒரு பெயிண்டர். நீங்க வேலைக் கொடுக்கிறவர். உங்களப்பத்தி இல்லாததும் பொல்லாததுமா, நாலு பேர் பேசுறதக் கேட்டா மனசே நோவுது சார். நான் ஒன்றும் உங்க குடும்பத்தவன் இல்ல சார். ஆனா எனக்கே கஸ்டமா இருக்கு. உங்கள நெனச்சா இன்னும்... சரிங்க சார். நான் ஏதோ கேக்கக் கூடாதத கேட்டுட்டேன். உங்களுக்கு மனசுல என்ன இருக்கோ. விடுங்க சார், விடுங்க சார்.’

முத்து அன்பாக சலித்துக் கொள்வதுபோல் திரும்பிக் கொண்டான். வீட்டுக்காரர் அவனை ஆச்சர்யத்தோடு பார்த்தார்.

அந்த அறைக்குள் வெளியிலிருக்கும் வாழைமரத்தின் இலைகள் அசையும் சத்தம் நன்றாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

’ முத்து,’ வீட்டுக்காரர் அழைத்தார். ’ நீ இப்ப என்னிக்கும் இல்லாதவனா, என் குடும்பத்துல ஒருத்தனப்போல தெரியிற. உன்கிட்ட என் மனசுல இருக்குறத அப்படியே சொல்லிடனும் போலிருக்கு.

மெதுவாக தலையைத் திருப்பி வீட்டுக்காரரைப் பார்த்தான் முத்து. இனி வீட்டுக்காரர் என்ன சொல்லப்போகிறார் என்று உண்ணிப்பாய் கவனித்துக் கொண்டிருந்தான்.

’ ஏங்கிட்ட கேட்டியே மகனா மகளானு.? அதப்பத்திதான் சொல்றேன்.’ அப்போது கிளட்ச் என்ற சத்தம் சன்னமாகக் கேட்டது.

’ என் மகள்னா சொன்ன. ச்சேய்... அவ எனக்கு மகளே இல்ல. காதல் பைத்தியம்.’ சிறிது இடைவெளிவிட்டு தொடர்ந்தார். ’ சூர்யா எனக்கு ஒரே பொண்ணு. நல்லப்பொண்ணுதான். சொன்னத கேட்டுக்குவா. செய்யாதனு சொன்ன எதையும் செய்யமாட்டா. என் முன்னால பேசக்கூட மாட்டா. ஆனா நான் அவகிட்ட அதிகம் பேசுனதில்ல. எல்லாம் என் மனைவிதான் பாத்துக்குவா. நல்லா வளத்தேன். படிக்க வச்சேன். சொத்து சேத்து வச்சேன். வேண்டியதெல்லாம் வாங்கிக் குடுத்தேன். எந்த கொறையும் இல்லாத பாத்துக்கிட்டேன். வெளியிலகூட அதிகம் அனுப்புனதேயில்ல. வீட்டுக்குள்ளயே பொத்தி பொத்தி வளத்தேன். ஊராருக்கு காட்டுறதில்ல. யார்கிட்டயும் அநாவசியமா பேசவிட்டதில்ல. படிக்கப்போனா படிப்புண்டு வீடுண்டுனு இருந்தப் பொண்ணு. நான் இருந்தா தலை நிமுந்துகூட பாக்கமாட்டா. குரலுக்குகூட ஒசத்தி பேசமாட்டா தெரியுமா.? பொண்ணுன்னா இப்படிதான் இருக்கனும்னு அவளோட அம்மா சொல்லி வளத்தது.

இந்த ஊர்ல எனக்கு நல்ல மதிப்பு மரியாதை. எங்காளுங்கன்னா என் பொண்ணதான் கட்டி வக்கினும்னு சம்பந்தம் பேச வருவாங்க. அருமையா படிப்பா.

புக்கெல்லாம் வச்சிருப்பா. காலேஜ் சேத்தேன். நல்லா படிச்சி முடிச்சிட்டு வெளிய வந்தா. அவள பஸ்ல தனியா அனுப்புனா சிக்கலாவும்னு நான் காலேஜ் பஸ்லதான் அனுப்புனேன் தெரியுமா.? அப்படியெல்லாம் பாத்து பாத்து வளத்தேன். தங்கநகை நெறைய இருக்கு. ஆனா அதிகம் விரும்ப மாட்டா. என் மனைவி நெறைய போட்டுவிட்டுவா. பாக்க அவ்ளோ மங்களமா தெரிவா. சாமிய பாக்குறாப்ல இருக்கும் தெரியுமா.?

ஊருக்குள்ள என்ன எல்லாருக்கும் நல்லா தெரியும். ஆனா யாரும் வீட்டுக்கு அதிகம் வரமாட்டாங்க. எங்காளுங்ககூட விசேசம்னாதான் வருவாங்க. அப்படி வீட்டை நிர்வாகம் பண்ணேன். பொம்பளங்கள அதிகம் வெளிய விட மாட்டேன். மரியாதையா இல்லாத இடத்துல எங்காளுங்க யாரும் இருக்கமாட்டோம். அதுதான் எங்க சாதி. அனாவசியமா வேற சாதி ஆளுங்களோட எந்தத் தொடர்பும் இருக்காது. இப்படி நல்ல விதமா போயிட்டிருந்தபோதுதான், ஒருநாள் சர்டிபிகேட் கோர்ஸ் பண்ணனும்னு கேட்டா. காலேஜ் முடிச்சி வீட்டிலிருக்க முடியலயாம். ரொம்ப கெஞ்சி கேட்டுகிட்டாளேனு நானும் சேர்த்துவிட்டேன். நம்மாளுதான் கோர்ஸ் நடத்துனாங்க. சரினு விட்டேன். ஆனா நான் எதுக்கு பயந்து வீட்டுக்கு வெளிய அதிகம் அனுப்பாம இருந்தனோ, அது நடந்துடுச்சி. ஒரு ஓடுகாலிக்கி பொறந்தவனோட சுத்திக்கிட்டிருந்தத பாத்துட்டு கோர்ஸ் நடத்துற நம்மாளுங்க என்கிட்ட சொன்னப்ப குலப்பெருமையையே குழியில பொதச்சிடுவாளோனு பயமாயிடுச்சு. யாரோ ஒரு நாரப்பயலோடு இவ எப்படி பழகலாம்.? அதும் கீழ்சாதிக்காரனோட.?

ஊருக்குள்ள நாம யாரு, எவ்வளவு மரியாத, எங்க சாதியில எவ்ளோ பேருக்கு நம்மலத் தெரியும். எங்க பாத்தாலும் வந்து முகங்காட்டி பேசிட்டிதான் போவாங்க. ஆனா இவளோ எல்லாத்தையும் போட்டு ஒடச்சிட்டா. அப்பவே அவள வீட்டுக்குள்ள அடச்சி வச்சிட்டேன். இதே விசயத்த ஊருகுள்ள வேறாள் எவனாவது பாத்தான்னா என் மானமே பறந்துடும். மொதல்ல அவனை ஒழிக்கனும்னு போனதும் அவனோட அப்பாதான் கைல சிக்குனான். கோவத்துல கட்டையில அடிச்சேன். குடும்பத்தோட காலி பண்ணிட்டு போகச் சொன்னேன். முடியாதுனு சொல்லிட்டான். இனி பேசி பிரயோஜனமில்லனு எனக்கு தெரிஞ்சவங்கள வச்சி ஒரு திருட்டு கேஸ்ல புடிச்சி உள்ள போட்டேன்.

பிறகு இவள மாத்த முயற்சி பண்ணதுலதான் அவ்ளோ சிக்கல் வந்துச்சு. வேற சாதி பையங்கூட பழகுறது தப்புமான்னா, மனுசங்களுக்குள்ள பாகுபாடு என்னப்பானு என்னயே திருப்பி கேக்குறா. அவனப் பத்தி நாங்க தெரிஞ்சிக்கனும்னு எங்களுக்கே அட்வைஸ் பண்றா. ஒருநாள் அப்படிதான் பாத்துட்டே இருக்கேன் என் முன்னாடியே அவ்ளோதூரம் என் மனைவிகிட்ட எதுத்து பேசிட்டே இருந்தா. செவினியிலயே வச்சேன் ரெண்டு. மயங்கி விழுந்து கிடந்தா.

என் மனைவி எவ்வளவோ எடுத்து சொன்னா. கேட்டாளா.? அவன மறந்துடுனு

சொன்னா, முடியாதாம். அவனப் பத்தி நெனக்க வேணாம்னா, நெனக்காம இருக்க முடியலயாம். வேற ஒருத்தன கல்யாணப் பண்ணிக்கோனா, பண்ண முடியாதுனு நாங்க என்ன சொன்னாலும் கேட்டுக்கவேயில்ல. இருந்து இருந்து பாத்துட்டு வேற வழியில்லனு கல்யாணத்துக்கு வரன் தேடி நம்மாளுங்கள்லயே சில குடும்பத்தார பொண்ணு பாக்க கூட்டிட்டு வந்தா மானத்தையே வாங்கிட்டா. மாப்ள கூட தனியா பேசனும்னு சொல்லி கூப்புட்டு, எனக்கு கல்யாணம் வேணாம், நான் ஒருத்தன காதலிக்கிறேனு ஓப்பனா சொல்லிட்டா. அதே மாதிரியே, இன்னும் சில முறை நடந்தது. குடும்ப மானத்தையே வாங்கிட்டா. அத்தோட எல்லாம் போச்சு.' வீட்டுக்காரரின் முகம் இயல்பு நிலையிலிருந்து கோரமாக மாறிக் கொண்டிருந்தது. முத்து குறுக்கில் எதுவும் பேசாமல் வீட்டுக்காரரை முழுமையாக பேசவிட்டு நடுவில் 'ஆம்' என்று தலையை மட்டும் ஆட்டிக் கொண்டான். வீட்டுக்காரர் தொடர்ந்தார்.

' அவள இவ்வளவு தூரம் விட்டது பெரியத் தப்பு. யார்கிட்டயும் பேசவிடாம தனியா வச்சிருந்தோம். சொந்தக்காரங்க வீட்டுலக் கொண்டுபோய் வச்சிருந்தோம். எங்க போனாலும் அந்த ஓடுகாலி மவனையேதான் நெனச்சிக்கிட்டிருந்தா. கொஞ்சங்கூட மாறல. அந்தளவுக்கு அவன் சூர்யாவோட மனச மாத்தி வச்சிருந்தான். ✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱ ✱✱✱✱✱✱✱✱✱✱✱✱. இன்னும் எவ்வளவு திட்டுனாலும் மனசு ஆறாது.

பாவம், என் மனைவிக்கு வேற ஊதிப்போன காத்து ஒடம்பு. அவள மனச மாத்த எவ்வளவோ முயற்சி பண்ணா. சாதத்துல வசிய மருந்து வச்சா. அவளோட தங்கச்சிய வச்சி அறிவுறை சொல்ல சொன்னா. அப்பவாது கேட்டிருக்கலாம். அவளோட ரூம்லயே அடச்சி வச்சோம். அப்பவும் மாறல. ஒருநாள் பயங்கரமான கோவம். போட்டு சாத்து சாத்துனு சாத்திட்டேன். நிம்மதியையே கெடுத்துட்டியேடினு என் மனைவியும் ஒரு பக்கம் அழுதா. அதுக்கு மேலயும் என்ன செய்றதுனு தெரியல. அப்பதான் என் மனைவி ஒன்னு சொன்னா. அவள அடப்பொணமா ஆக்கிறலாம்னு சொன்னா. அதவிட்டா வேற வழியில்ல. கௌரவமே காத்துல போனப்புறம் அதுக்கு காரணமானவ மட்டும் எதுக்கு உயிரோட இருக்கனும். அதான் ஒரே முடிவா அவளக் கொன்னுட்டோம்.' மிக நல்ல செயலை செய்தது போன்ற திருப்தியுடன் கூறினார் வீட்டுக்காரர். அவரது கையும் சேர்ந்து வீசிக் காட்டியது.

முத்து அதிர்ந்து போனவனாய் தன்னைக் காட்டிக் கொண்டான். ' எப்படி என்று சைகையில் கேட்டான்.

' அந்த நாள் எங்க கோவந்தாங்க அவள அடிச்சி போட்டுட்டோம். அடி அடின்னு அடிச்சதுல மயங்கி கெடந்தா. முடிவு பண்ணபடி அவ வாயையும் கைக்காலயும் கட்டிட்டோம். முகத்துல மொத்தமான ஈரத்துணியை வச்சி மூடிட்டோம். தொட்டிக்குள்ள எறக்கிட்டு ஒரு மணி நேரம் கழிச்சி வெளிய தூக்குனோம். வீட்டு பின்னாடி குழித் தோண்டி வேஸ்ட்டு துணி பேப்பர் குப்பனு எல்லாத்தையும் போட்டு எண்ணெய் ஊத்தி

எரிச்சிட்டோம். இந்த எடத்துல எரிச்சா யாருக்கும் சந்தேகம் வராது. நெருப்பு தணிஞ்சப்புறம் மண்ணப்போட்டு மூடிட்டு அதுமேல ஒரு வாழக்கன்னு நட்டு வச்சோம். அப்படியே பாவம் கழிக்க கங்கைக்கு போயிட்டு பத்துநாள் கழிச்சுதான் வீட்டுக்கே வந்தோம். யாருக்கும் எந்த சந்தேகமும் வரல. எனக்கு என் கௌரவம் திரும்ப கெடச்சிடுச்சி. அப்புறந்தான் நிம்மதியா இருந்துச்சி. பல மாசம் ஆயிட்டுது. இதுவரை போலீஸ்ல கூட தெரியாது. அப்படியே தெரிஞ்சாலும் பெருசா ஒன்னும் கழட்ட முடியாது…' வீட்டுக்காரர் முடித்திருந்தார்.

பேரதிர்ச்சியிலிருப்பதுபோன்று காணப்பட்ட முத்து மெதுவாக எழுந்து சன்னல் பக்கமாகப்போய் நின்றான். சில்லென்ற காற்று மெதுவாக சன்னல் வழியே வந்துக் கொண்டிருந்தது. மிக அமைதியான அந்த வேளையில் அவர்களுக்குள் நடந்த இந்த உரையாடல் முத்துவை ஆழ்ந்து யோசிக்க வைத்தது.

' க்ளட்ச்.'

அங்கே சொல்லப்படாத பேரமைதி நிலவியது. சிறிது நேரத்திற்குபின் முத்து பேசத் தொடங்கினான்.

' ஆக மொத்தத்துல சாதிதான் முக்கியம்.?'

' கண்டிப்பா.!'

' பெத்தப் பொண்ணவிட சாதிதான் வேணும்.?'

' ஆமா.'

' வேற எதுவும் முக்கியமில்ல.?'

' இல்ல.'

' பொண்ணு வேற சாதி பையனக் கட்டக்கூடாது.?'

' ஆமா. அப்படி மட்டும் கூடவே கூடாது.'

' அதத் தடுக்க என்ன வேணாலும் பண்ணுவிங்க.?'

' பெத்தப் பொண்ணுன்னாலும் கொன்னு போடுவிங்க.?'

' பெத்தப் பொண்ணென்ன பெத்தப்பொண்ணு.? எங்க சாதில எந்தப் பொண்ணையும் சரி, வேற சாதிக்காரனோட சேரவே விடமாட்டோம்.'

' நிஜமாவா.? எந்தப் பொண்ணையுமா.?'

' எந்த பையனையும்கூட விடமாட்டோம். ஏன்னா, அதுதான் எங்க கௌரவம்.'

' அது சரிதான். கௌரவம்…'

' சாதி கௌரவம் முத்து.'

' கௌரவத்துக்காக கொலையும் நடக்கும்.?'

' ஆமா. நடக்கும். செத்தாவது கௌரவத்தைக் காப்பாத்துவோம்.

' அப்ப நீ செத்துடு.' இயல்பாய் சொல்லிவிட்டான் முத்து.

’ என்ன.?’ வீட்டுக்காரரின் முகம் கேள்விக்குறியாய் மாறியது.

’ புரியல.? நீ செத்துடுனு சொன்னன்டா, சாதி வெறி பேயி.’ கோபத்தில் குரல் கணீரென்று ஒலித்தது.

’ என்னை ஏமாத்தி பேசுறியாடா.? இப்பதானடா என் குடும்பத்துல ஒருத்தன் மாதிரி பேசுன.? போட்டு வாங்குறியா.?’

’ ஆமா, அப்ப நீ என்ன சொன்ன.? உன் பொண்ண கொன்னதுக்கப்புறம் உனக்கு கௌரவம் திரும்ப வந்துடுச்சா.? கொலையில என்னடா உனக்கு கௌரவம்.?’ புருவங்கள் சுருங்க கேள்விக் கேட்டான் முத்து.

’ அவ என்னோட மகள். நீ யார்டா கேக்க.?’ வீட்டுக்காரர் எதிர்க்கேள்வி கேட்டார்.

’ கீழ்சாதிக்காரப் பையன்னா.? அவனும் மனுசந்தான். அதனால்தான் சூர்யா அவனை விரும்பியிருக்கா.’ விளக்கத்தின் வீரியம் புரிந்தும் கண்மூடித்தனமாக மறுத்தார் வீட்டுக்காரர்.

’ செத்தாவது கௌரவத்த காப்பாத்துவியா.? உன் பொண்ணுக்கு புடிச்சவன்னு தெரிஞ்சதும் கீழ்சாதிக்காரன்னு சொல்லி பிரிச்சி, அவளுக்கு புடிக்காதவன்கிட்ட புணர ஒப்படச்சிட்டு கதவ மூடிட்டு திண்ணையில தலை சாய்க்கிறதுதான்டா உன்ன மாதிரி சாதி வெறி அப்பனுங்களோட மானங்கெட்ட கௌரவம். ச்சீய்...’ முத்து காரி உமிழ்ந்தான்.

’ என் சாதி பொண்ணுங்க வயித்துல ஒரு கீழ்சாதிக்காரனோட புள்ள பொறக்கக்கூடாது. அப்படி பொறந்தா அதையும் தரையிலடிச்சி சாகடிப்போம்.’ வீட்டுக்காரர் மிரட்ட முயல்வதை எதிர்ப்பார்த்திருந்தான் முத்து.
’ உன் சாதிய வளக்க பொண்ணுங்க ஒடம்பு என்ன சாதி மெசினா.?’
’ ஆமாண்டா. மெசின்தான்.’

’ சக மனுசன மனுசனா பாக்கலண்ணா உனக்கு பண்பாடு ஏதுடா.? இதுல ஊருக்குள்ள உனக்கு நல்ல மரியாதையா.? அனாவசியமா வேற சாதிக்காரங்களோட உங்களுக்கு சம்பந்தமில்லையா.? நீயே விளைய வச்சா சோறு திங்கிற.? உன் சாதியே நாத்து நட்டு கதுரறுத்து அரிசி எடுத்தா திங்கிற.? நீ கட்டியிருக்க வீடு. உன் கைப்பட்டேவா கட்டுன.? வேற யாரும் கட்டுல.? அட இந்த துணி பல சாதி கைப்பட்டுதாண்டா உன் ஒடம்ப மறைக்கிது. இப்பலாம் எங்கடா போச்சி உன் சாதி.? வேற சாதி கை வக்கிலன்னா நீங்கல்லாம் பசியில நாண்டுகிட்டுதான் சாகனும்.’ முத்துவின் தெளிவான சொல்லால் வீட்டுக்காரர் பேச்சிழந்து நின்றார்.

' நம்மூர் சிற்பியோட மகள் காதலிச்சப் பையனுக்கு என்னாச்சினு தெரியும்ல.?' கொலைப்பெருமைப் பீத்தினார் வீட்டுக்காரர். ' நான் பேசுறேன்னு சொல்லி பொண்ணை நம்ப வச்சிட்டு, பையனைக் குடிக்க வச்சி சண்டையிழுத்து அங்கயே முடிச்சிட்டாங்க. நான் அப்படிலாம் ஏமாத்துலயே. வேணாம்னு சொன்னேன். அவ கேட்டுக்க மாட்டேன்னுட்டா.'

' ஹ்ம் காலங்காலமா புலம் தாண்டிதான் காதலிச்சிருக்கான் நம்ம மூப்பாருங்க. எந்த பிரச்சனையும் இல்ல. ஆனா இன்னிக்கு நீ பெத்த மகளக் கொன்னுட்டு நியாயம் சொல்றியா.?' பரிகசித்தான் முத்து.

' அப்படிதாங்குறேன். என் சாதிப் பொண்ணு என் சாதி பையனுக்குதான் முந்தி விரிக்கனும்.' வீராப்பாய் சொன்னார்.

' அதென்னடா முந்தி விரிக்கனும்.?' ஏளனப்படுத்திக் கேட்டான் முத்து.
' ஏய்...' நாக்கைக் கடித்தார். ' ஆமாண்டா . எங்க பொண்ணு உறுப்புலதான்டா எங்க சாதி கௌரவம் இருக்குது.'

' அப்படியா .. பாரேன்.. உறுப்புக்குள்ள கௌரவம் வாழுதா.? அடேய், ✸✸க்கு ஏதுடா சாதி.?' இதற்குமேல் அடுக்க வீட்டுக்காரரிடம் கருத்தில்லாமல் போனது. தெளிவான கேள்விகள் அரண்போல் நிற்க, கண்மூடி வார்த்தைகள் கல்லில் பட்ட அம்புகளாய் உடைந்து விழுந்தன. மேற்கொண்டு என்ன சொல்வதென்று யோசித்து கொண்டதை முத்து கண்ணுற்றான். இனி தர்க்கம் கடந்து செயல்தான் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

' ஆயிரந்தா இருந்தாலும் என் சாதி எனக்கு வேணும். அதுக்காக என்ன வேணாலும் செய்வேன். உன்னால என்னடா கழட்ட முடியும்.?'

இயல்பாய் நகர்ந்து நின்றுக் கொண்டான்.

' மொதல்ல என்ன சொன்ன.? சூர்யா உன் பொண்ணு. கேக்க நான் யாரா.? எப்ப நீ பெத்த மகளையே கொன்னியோ அப்பவே அவ என் மகளாயிட்டா. சூர்யா என் மகடா. சூர்யாவுக்கு நான் அப்பன்டா.!' ஓங்கிய மரக்கட்டையினால் தலையில் விழுந்த அடிக்கு கண்கள் பிதுங்க மயங்கி விழுந்தார் வீட்டுக்காரர். அன்றைய இரவு முடிந்து விடியல் பிறந்தது.

தொடரும் ...

- கார்த்தி டாவின்சி

# ஆழ்கடல் வடுக்கள்

முன்னறிவிப்பின்றி
கொஞ்சலும் சீண்டலுமாய்
பற்றித்தீய்க்க துரத்தும்
அடர்மிகு காட்டுத்தீயில்
சருகுகளாய் உதிரும்
தலைமுறை சாபங்களைத்
கொஞ்சமும் தவிர்க்க
இயலவில்லை


வெளியேகும் கண்ணகிகளால்
திட்டமிட்டுச் சிதைக்கும்
தவணைக்கடை வாழ்வை
மீளப்போராடும் பயணங்களில்
நெரிசலோடு விழித்திருக்கும்
துச்சாதன வன்மம்
மென்மேலும் காயமாக்கி
ருசித்திட நாள்நோக்கும்
ஜனகர்களின் சீதைகளை
வெளிச்சென்று மீளும்
யுத்தமுடிவின் யாவற்றிலும்
ஆடைக்குள் தைத்திருக்கும்
இந்திர அஸ்திரங்கள்
குளியலில் பிடுங்கியெறிய
அறைச்சுவறில் ஒட்டி
இலக்குகள் மாறாமல்
பயங்கொள்ள கண்ணடிக்கும்

மீண்டும் விகாரமோடு
காந்தவிசையால் கவ்விடும்
மலைப்பாம்பின் கூரிய பற்களில்
ஒளிந்துள்ள வெறி
பெண்ணாக இயங்கவிடாமல்
மிருகமாகித் துய்த்திடும்வரை
ஆழ்கடல் வடுக்களை
எந்தக் களிம்பினால் ஆற்றிட?

--
பொன்.தெய்வா

மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 14)



# செண்பக வனம்

வாங்கிய அடிகளின் வலிகள் அப்போது தான் புரிந்தது. அடுத்த அடி வைக்க சிரமப்பட்ட மாணிக்கத்தை தோளில் தாங்கினான் முகிலன்.
‘‘நானே நடந்துடுவேன் விடுங்க அண்ணா‘‘ என்ற மாணிக்கத்தை, ‘‘அதெல்லாம் தெரியும், வாடா ‘‘ என்று தோளில் தாங்கி கொண்ட முகிலனும் மாணிக்கமும் ரதத்தை நோக்கி போனார்கள்.
‘‘சிவநேசர் எப்படி இறந்தார் ?‘‘ என்று கேட்ட முகிலனின் கண்களில் நீர் பெருகியிருந்ததை கவனிக்க தவறவில்லை மாணிக்கம்.

என் அன்னை இறந்த 25 நாட்களில் அவரும் இறந்துவிட்டார். நானும் கரியனும் அன்னைக்கு விளக்கேற்றிவிட்டு திரும்பி வீட்டிற்கு வந்தபோது அவர் இறந்து கிடந்தார். அவர் இறப்பதற்கு முன்னர், யாரோ ஒரு காளமுகர் அவரை சந்தித்ததாகவும் சொன்னார்கள். அதேபோல என் தாயார் இறக்கும் போதும் நான் அவருடன் இல்லை. அவர் இறப்பதற்கு முன்னரும் யாரோ ஒரு காளமுகத்தாரை சந்தித்ததாக சொன்னார்கள் என்று கூறியவாறே ஒரு பெருமூச்சுவிட்டான் மாணிக்கம். யார் அந்த காளமுகத்தார் ? யார் அது கரியன்? என்று கேட்டு கொண்டே ரதத்தை அடைய ரதத்தினுள் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டு படுத்திருந்த கரியனை கண்டதும் தூக்கிவாரிப்போட்டது முகிலனுக்கு.

‘‘பதறாதீர்கள் அண்ணா! இவன்தான் கரியன். என் தம்பி, என் நண்பன் எல்லாமுமே இப்போது இவன்தான்‘‘ என்று சொல்லிக்கொண்டு இருந்த மாணிக்கத்தை பாவாமாகவும் பக்கத்தில் நிற்கும் முகிலனைக் கோபமாகவும் பார்த்தான் கரியன்.

அதே நேரத்தில் எக்காலமும் கோட்டை முரசும் போட்டி போட்டுக் கொண்டு ஒலிக்கும் சப்தம் கோட்டை திசையிலிருந்து வர
‘‘அடடே ! குந்தவை தேவியும் வந்திய தேவரும் வந்துவிட்டார்கள் போல மாணிக்கம்,

நீ அவர்களை பார்த்ததில்லை தானே?மாணிக்கம் . எங்கே சாரதி ?.‘‘

‘‘ முகிலா.. நான் இங்கே இருக்கிறேன்‘‘

‘‘மாரி நீ தானே? மாணிக்கத்தை கிழவாசல் வழியாக அழைத்து செல், உன்னை அந்த வழியே விடுவார்களா? எதற்கும் இந்த இந்த பனை இலச்சினை கொடியை ரதத்தில் கட்டிகொள் என்று சொல்லிக்கொண்டே கொடியை ரதத்தில் கட்டினான் முகிலன். மாணிக்கம் விரைவாக சென்று விரைவாக வா ! இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் கள பயிற்சி முடிந்து விடும்.

உன்னிடம் நிறைய பேச வேண்டும் என்று பேசிக்கொண்டே சென்ற முகிலனை இடைமறிக்கும் வண்ணம் ஒரு குதிரை வேகமாக களத்திற்குள் புகுந்து காட்சி மேடையை நோக்கி பாய்ந்தது. குதிரை மீதிருந்த மாரிராசன், முகிலனை பார்த்து தலையசைத்து சிரித்த வண்ணமே அவனை கடந்தார்.

மாரிராசன் வந்த குதிரை காட்சிமேடை வரை போவதை கண்ட முகிலனுக்கு, ‘‘அப்படி என்ன அவசர செய்தி என்று மனதிற்குள் ஓடியது‘‘. முகிலனின் எண்ண ஓட்டத்தைக் கலைக்கும் வண்ணம் களத்திற்குள் வேறொரு ரதம் புகுந்தது.

அதில் அனிருதரை பார்த்த முகிலன், ‘‘அடேய் மாரா, இன்று ஏதோ பெரிய விசயம் நடக்க போகிறது, நீ விரைவாக மாணிக்கத்தை அழைத்து சென்று அழைத்து வா‘‘ என்றவன் மற்றவர்களின் பதிலை எதிர்பார்க்கவில்லை.
முகிலனின் மனதில் கோட்டைகுள் என்ன நிகழுமோ என்கிற பீதி தொற்றிக் கொள்ள கோட்டையோ விழாக்கோலம் பூண்டிருந்தது.

கோலாகலத்திற்கு குறைவில்லாத கோட்டையின் வாயில் கதவருகே மூவுலகை ஆண்ட சோழ சக்கரவர்த்தி கண்டாராதித்த சோழரின் மனைவியான செம்பியன் மாதேவியார் முன்னிற்க, அவருக்கு பின்னால் நீண்ட வரிசையில் பெண்கள் காத்திருந்தனர். இதையெல்லாம் வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்தில் நின்ற ஒருவன் பக்கத்தில் நின்றவனை தோளில் சுரண்டி ‘‘அண்ணே, அண்ணே ,அந்த வயசான அம்மா தான் செம்பியன் மாதவியாரா அண்ணா?‘‘ அவர்களுக்கு அடுத்தாற் போல் உள்ள அந்த அழகு மங்கையர்கள் கூட்டம் யார் யார் அண்ணா?

‘‘ஆமாம் தம்பி அவர்கள் தான் சிவதொண்டு பெருமாடி செம்பிய மாதேவியார், அவருக்கு அடுத்தார் போல் உள்ளவர்கள் இந்நாடு ராணிகள். முதலாம் கூட்டம் உத்தம சோழ சக்கரவர்த்தியின் மனைவிகள். இரண்டாம் கூட்டம் அருண்மொழித்தேவரின் மனைவிகள் மற்றும் அரசகுல பெண்கள், ஏன் உனக்கு தெரியாதா? நீ எங்கிருந்து வருகிறாய் ‘‘

அண்ணே நான் காஞ்சிக்கு வடக்கலேர்ந்து வருகிறேன். எனக்கு தஞ்சை கோட்டையையும் சக்கரவர்த்தி உத்தம சோழரையும் தரிசிக்க வெகுநாள் ஆவல், அதான் வந்துவிட்டேன்! இங்கு என்ன நடக்கிறது அண்ணா ? எதற்காக கோட்டை விழாக்கோலம் பூண்டிருக்கிறது ?

‘‘தம்பி சக்கரவர்த்தியை தரிசிக்கும் அதிர்ஷ்டம் உனக்கு இல்லை, அவர் நேற்றே அவரது தர்மபதினியுடன் எங்கோ சென்று விட்டார் .
அதனால் நீ கோட்டையை மட்டும் சுற்றி பார்த்துவிட்டு போக வேண்டியது தான். ஆனால் உனக்கு வேறொரு பாக்கியம் இருக்கிறது . இன்னைக்கு சோழநாட்டு சேனாதிபதி வந்தியதேவர், அவரது மனைவியார்களுடன் சோழர்களின் கொற்றவை தேவிக்கு வேண்டுதல் நிறைவேற்ற வருகிறார்கள். அதனால் தான் இத்தனை கோலாகலம் இன்று.‘‘

அண்ணா கொற்றவை கோவில் எங்கே உள்ளது அண்ணா ?

‘‘அட நீ என்னப்பா, கேள்வி கேட்டே என்னை கொல்கிறாய். சற்று பொறு, குந்தவை தேவியும் வந்தியதேவரும் நேராக கொற்றவை கோவிலுக்கு தான் செல்வார்கள். அவர்களோடு சென்று நீயும் தரிசித்துக் கொள், இப்போது என்னை விடு ‘‘ என்று சொல்லிக்கொண்டே அவன் அங்கிருந்து நகர, அதே நேரத்தில் எதிர்புறத்தில் நின்றிருந்த அரண்மனை பெண்களுக்கு நடுவே சின்ன சலசலப்பு ஏற்பட்டது.

அரண்மனை சேடி பெண்கள், வானதி தேவியிடம் இளவரசி மாதங்கி இன்னும் வரவில்லை என்று முறையிட்டு கொண்டிருந்தனர். வானதி தேவியோ ‘‘இந்த பெண் எங்கே சென்று விட்டாள்? ஊர்வலம் வேறு, கோட்டையை நெருங்க போகிறது. குந்தவை தேவியின் கண்கள் முதலில் மாதங்கியை தான் தேடும், இப்போது என்ன செய்ய‘‘ என்கிற சிறிதாய் பதறி கொண்டிருக்க..

அரண்மனை வாசலிலோ ‘‘சல்‘‘ ‘‘சல்‘‘ என்று கால் சலங்கை ஒலிக்க அழகு பதுமை ஒன்று ஓடி வந்து அங்கே காவல் காத்து நின்ற குதிரை வீரரிடம் ‘‘ஐயா உங்கள் குதிரையின் காலில் இரத்தம் வடிகிறது நீங்கள் அதன் மீது இப்படி கம்பீரமாய் அமர்ந்து இருக்கீறீர்களே ? என்று கோவமாய் கேட்க.

‘‘என்ன ரத்தமா‘‘!? என்று சொல்லிக்கொண்டே குதிரை வீரன் கீழே இறங்கியது தான் தாமதம், ஒரே பாய்ச்சலில் குதிரை மீதேறி, அதனை வேகமாய் விரட்ட குதிரை முன்னங்கால்களை மேலே உயர்த்தி பெரிதாய் கனைத்து புழுதியை கிளப்பிக்கொண்டு ஓட, அதன் பின்னாலேயே ‘‘இளவரசி‘‘ ‘‘இளவரசி‘‘ ‘‘மாதங்கி தேவி‘‘ ‘‘இளவரசி‘‘ என்று கூவிகொண்டே அக்குதிரை வீரன் ஓட
‘‘அடேய் நில்லடா, உன் குதிரை தானாய் வரும்‘‘ என்று என்று சொல்லிக்கொண்டே

‘‘ஹ ஹ ஹ‘‘ சிரித்தார்கள் அங்கிருந்த மற்ற வீரர்கள்.

வீரிட்டு ஓடிய குதிரை கோட்டை வாசலருகே நின்றுகொண்டிருந்த பெண்களுக்கு அருகே நின்று மீண்டும் முன்னங்காலை மேலே தூக்கி பலமாக கனைத்து நின்றது. அங்கே வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்திற்கு இந்த குதிரையின் செயல் அவர்களுக்கு உற்சாகமளிக்க ‘‘ஆஹா‘‘ கோசமும் ஆரவாரமும் அதிகரித்தது. குதிரையிலிருந்து இறங்கிய இளவரசி மாதங்கி, அதனை பாசமாய் தடவிக் கொடுத்து அதன் பின்னங்கால் தொடையில் சற்று வேகமாக அடிக்க அந்த குதிரை சின்ன குட்டி போல துள்ளி குதித்துக் கொண்டு அரண்மனை வாசலை நோக்கி ஓடியது. இளவரசி மாதங்கி, அரண்மனை பெண்களின் கூட்டத்திற்குள் செல்ல அவரது தோழி பெண்கள் அவரின் ஆடைகளை சரி செய்தனர். அதற்குள்ளாக அங்கே வந்த அருண்மொழி தேவரின் இளைய மகளான  இளவரசி குந்தவை, ‘‘அக்கா செம்பியன் மாதேவியார், உங்கள் மீது நல்ல கோபத்தில் இருக்கிறார். அவரை போய் சமாதானம் செய்து அவர்களின் அருகில் உங்களை நிற்க சொல்கிறார் அம்மா‘‘ என்று வானதி தேவியை  கை காட்ட, சரி நான் பார்த்துக்கொள்கிறேன். நீயும் வா என்னோடு என்று சொல்லிக்கொண்டே தன் தங்கை குந்தவை கையை பற்றி அழைத்துக் கொண்டு செம்பியன் மாதேவியார் அருகில் சென்றார் அருண்மொழி தேவரின் மூத்த மகளான இளவரசி மாதங்கி.

கட்டியக்காரன் தன் இடி முழக்க குரலில்
‘‘சோழநாட்டு சேனாதிபதி வந்திய தேவர் வருகிறார், வருகிறார்‘‘ என்று முழங்க இந்த நாளுக்காக காத்துக் கிடந்த கூட்டமொன்று தங்களை தயார்படுத்திக் கொண்டது

யார் அந்த கூட்டம்?

தொடரும்..........

# கிராம வாழ்க்கை

மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை அமைவது கிராமத்தில் தான். மனிதன் தன் சோர்வு நிலையை தவிர்க்கவும் தூய்மையான காற்றை சுவாசிக்கவும் துன்பமின்றி வாழவும் கிராமத்தை தற்போது விரும்புகிறான். இன்றைய காலத்தில் பெரும்பாலும் விவசாயம் நடக்கும் இடங்களே கிராமங்கள் என மக்கள் கருதுகின்றனர்.

விவசாய காலத்தில் வரப்புகளில் ஏறி நடக்கும் போது முற்றிய செந்நெல்லின் மனம், தானியங்களின் செழிப்பு மனதை பறிக்கும். இதை அனுபவித்தவர்களுக்கே மட்டுமே தெரியும்.

கிராமத்தில் நான் வாழவில்லை என்றாலும் கிராமத்திற்குச் செல்ல விரும்பினேன். அங்குள்ள வயல்வெளியில் நடக்க வியந்தேன். குளத்தில் இறங்க ஆசைப்பட்டேன். உறவுகளுடன் சிரித்து பழக முயற்சித்தேன்.

கிராம மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டும், சிரித்து பழகிக் கொண்டும், வஞ்சனையின்றி வாழ்ந்துக் கொண்டும் இருக்கின்றனர்.

இரவு நேரத்தில் அந்த குடிசை வீட்டின் வாசலில் ஒரு பெரிய காலி இடம், அந்த இடத்தில் ஒரு சனல் கட்டிலில் படுத்துக் கொண்டு இரவு நிலவை ரசித்துக் கொண்டும், நல்ல காற்றை சுவாசித்துக் கொண்டும் இயற்கையை அனுபவிக்கிற சுகம் வேறு எதில் கிடைக்கும்?

என்னதான் வருடந்தோறும் அலைபேசியில் கையில் அடங்கும் விளையாட்டுகளை விளையாடினாலும், கிராமத்தில் நடக்கும் திருவிழாவின் போது அனைத்து சொந்தங்களும் ஒன்று கூடி ஒருவரையொருவர் நலம் விசாரித்து, உபசரித்து, திருவிழாவில் கரகாட்டத்தையும், நாடகத்தையும் ரசிக்கும் சந்தோசமே தனி...

ஏதோ எனக்கு கிராமத்தை பற்றி தெரிந்ததை எழுதினேன்!.... மற்றும் ஒரு வேண்டுகோள்....

தன் வாழ்வில் கால்களில் சக்கரத்தை கட்டிக்கொண்டு வேலைக்கு வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று ஓய்வில்லாமல் வாழும் பல பேர், தன் கடைசி காலத்திலாவது கிராமத்தில் ஒரு குடிசை வீட்டில் நிம்மதியாக வாழ வேண்டும் என்று கிராமத்தில் இடம் வாங்கி வைத்திருக்கின்றனர். அவர்களின் இந்த ஆசை நிறைவேறும் வரையிலாவது கிராமங்களை கிராமங்களாகவே வைத்திருக்க வேண்டிக்கொள்ளும் சிறிய உள்ளம்! நன்றி!

- மகாராணி தாண்டான்

# வரலாற்று நாயகன் மகேந்திர சிங் தோனி

ஒரு பெயர். இந்திய கிரிகெட் அணியின் வரலாற்றை மாற்றியது என்றால், அப்பெயர் மகேந்திர சிங் தோனி. சர்வதேச கிரிக்கெட் விளையாட்டில் அனைத்து கோப்பைகளையும் வாங்கிய ஒரே கேப்டன் மகேந்திர சிங் தோனி. 2004 ல் தன்னுடைய 23 வது வயதில் சிறு பொடியனாக வங்காளதேச அணிக்கு எதிரான ஒருநாள் சர்வதேச போட்டியில் மைதானத்தில் நுழைந்தார் தோனி.

2007 ல் நடந்த ஐ.சி.சி உலக 20/20 போட்டியில் கோப்பையை வென்றுள்ளார். இவர் வென்றதே இந்திய அணி  வென்ற முதல் 20/20 உலக கோப்பை.  2010 மற்றும் 2016 ல் நடந்த ஆசிய கோப்பை விளையாட்டில் ஆசிய கோப்பையை இந்திய அணிக்கு வென்று தந்துள்ளார். 2007 மற்றும் 2008 ல் நடந்த பொதுநலவய போட்டி தொடர் ஐ வென்றுள்ளார். 2013 ஐ.சி.சி. வாகையாளர் கோப்பையை  இந்திய அணிக்கு வென்று தந்துள்ளார்.

1983 ல் கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி உலககோப்பையை வென்றது. அப்போது தோனியின் வயது இரண்டு.  அதற்கு பின்  2011 உலககோப்பையை இருபத்தி எட்டு வருடங்களுக்கு பிறகு இந்திய அணிக்கு தன்னுடைய இறுதிகட்ட சிக்சர் மூலம் பெற்று தந்துள்ளார் மகேந்திர சிங் தோனி. கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கரின் கனவையும்  இந்திய மக்களின் கனவையும் தோனி  நிறைவேற்றினார்.

அதிரடியாக விளையாடும் இவர், மத்தியகள வீரராக விளையாடும் இவர், குச்சகாப்பாளரான (wicket keeper) இவர், ஒரு நாள் போட்டிகளில் சிறப்பாக ஆட்டத்தினை முடித்து வைக்கும் திறன் கொண்டவர்களில் ஒருவராக அறியப்படுகிறார். மேலும் சர்வதேச அளவில் சிறந்த குச்சக் காப்பாளர்களில் ஒருவராகவும் அறியப்படுகிறார். 2012 ம் ஆண்டில் ஸ்போர்ட்ஸ் ப்ரோ ஊடகத்தின் அதிக வியாபாரம் ஆக கூடிய தடகள வீரர்கள் வரிசையில் இவருக்கு 16 வது இடம் கிடைத்தது. இந்தியன் சூப்பர் லீக்கின் சென்னையின் எப்.சி அணியின் உரிமையாளர்களில் ஒருவர் ஆவார். 2015 ம் ஆண்டில் போர்பஸ் இதழ் வெளியிட்ட அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் இவருக்கு 23 ம் இடம் கிடைத்தது.

தோனி ஒரு வலது கை மட்டை வீச்சாளர். குச்சக்  காப்பாளர். வலது கை மிதி வேகம் பந்து வீச்சாளர். மின்னலின் வேகம் 0.10 என சொல்வார்கள். ஆனால் மின்னலை விட

வேகமாக குச்சக் காப்பாளர் தோணி 0.07 வேகத்தில் பந்தை குச்சியில் அடித்து ஓட்டத் தோல்வியை ஏற்படுத்துவார் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றியோ தோல்வியோ தன்னை பெரிதாக பாதிக்காது என்ற மனநிலையில் தலைமை பொறுப்பினை செய்வார். அதனால் தான் "cool captain" என்று பன்னாட்டு வீரர்களால் பாராட்டப்படுகிறார். தலை என்று செல்லமாக தமிழ்நாட்டு ரசிகர்களால் அழைக்கபடுகிறார்.

சச்சின் டெண்டுல்கர், எனது 25 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையில் நான் பார்த்த ஒரு சிறந்த தலைமை மகேந்திர சிங் தோனி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

சஞ்சய் மஞ்சுரேகர், நான் இறக்கும் தருவாயில் டோனியின் 2011 உலககோப்பை இறுதி சிக்சரை பார்த்துவிட்டு சாக வேண்டும் என்று விரும்பி கூறியுள்ளார்.

நியூசிலாந்து அணியின் கேப்டன் கேன் வில்லியம்சன், தோனி நியூசிலாந்தியனாக தேசம் மாறினால் எனது அணியில் சேர்த்துகொள்வேன் என பெருமிதமாக கூறியுள்ளார்.

மைக்கல் ஹசி, நான் எனது வாழ்நாளில் பார்த்த ஒரு சிறந்த மட்டையாளன், தலைமையாளன் மகேந்திர சிங் தோனி என்று கூறியுள்ளார்.

விராட் கோலி, நான் இந்திய அணியின் கேப்டனாக இருந்தாலும், சில இக்கட்டான சூழ்நிலையில் டோனியின் அறிவுரையை கேட்டு தான் முடிவெடுப்பேன் என்று கூறியுள்ளார்.

ரன் அவுட்ல் ஆட்டத்தை தொடங்கிய தோனி  ரன் அவுட்ல் ஆட்டத்தை முடித்தார். 2019 உலக கோப்பை ஆட்டத்தில் கண் கலங்கியபடி தோனி மைதானத்தை விட்டு விலகினார். சகாப்தம் நிறைவடைந்தது.

இந்த சகாப்தம் மட்டும் அல்ல, நமது வாழ்வும் முடிய போகிறது. தோனி மறுபடியும் விளையாட வருவாரா என நாம் எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். அவர் விளையாடினாலும் அதை காண்பதற்கு நாம் இருப்போமா என்று எனக்கு தெரியவில்லை. ஏனெனில் ஹைட்ரோகார்பன் போன்ற ஆபத்தான  மண்ணை மலடாக்கும் திட்டங்களால் நம் அழிவு நெருங்குகிறது. ஹைட்ரோகார்பன் போன்ற அழிவு திட்டங்கள் வந்தால் வாழ்வதற்கோ, விளையாடுவதற்கோ நம்மிடம் நிலம் இருக்காது. தோனி மைதானத்தை விட்டு வெளியேறியது போலவே இந்த அழிவு திட்டங்களும் தமிழகத்தை விட்டு வெளியேறட்டும்.

#StopHydroCarbon

- G.T. மகேஷ்

# இரவுப் பயணம்

எனக்கு இந்த இரவு நேர நெடுந்தூரப் பயணங்களில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பெரிய ஆர்வமேதுமில்லாமல் தான் இருந்தது. எந்த ஒரு புதிய பழக்கத்திற்கும் மாற்றத்திற்கும் நாம் நேசித்த ஏதேனும் ஒன்றின் முடிவு ஆரம்பமாக இருக்கும். அந்த வகையில் அவள் இல்லை என்ற வெறுமையை விரட்டவும், எனக்குள் இருக்கும் என்னை அழிந்து விடாமல் காப்பாற்றவும் நானாய் தேர்வு செய்து கொண்ட போதை தான் இரவு நேர நெடுந்தூரப் பயணம்..

இரவு நேரப் பயணம் நிறைய ஆச்சர்யங்களையும் அழகியலையும் ஆபத்துகளையும் உள்ளடக்கியது. அது நிறைய அழகானவற்றை ரசிக்க செய்யும்.

இத்தனை ஆபத்தானவர்களும் இருக்கிறார்கள் என அறியச்செய்யும்.
சில நேரக்களில் விபத்துகளில் சிக்க செய்யும், பல நேரங்களில் விபத்துகளில் சிக்கியவர்களை மீட்க செய்யும்.

கையேந்திபவன் மாஸ்டர் எந்த காலேஜில் சமையல் கற்றிருப்பார் என யோசிக்க செய்யும்.

எல்லாம் இருந்தால் என்ன இருனூறு ரூபாய் கொடு, இல்லனா ஐயாவ பாருனு மீசையை முறுக்கியபடி கம்பீரமாய் நிற்கும் ஏட்டய்யா;
குடித்துவிட்டு நிற்க முடியாமல் லிப்ட் கேக்கும் குடிமகன்; அந்த ரோடு கொஞ்சம் ஆபத்தானது, தனிமையில் போகும்போது பத்திரம் என அக்கறை காட்டும் நல்லவர், என பலமனிதர்களை கடக்கச்செய்யும்.

இதற்கு தான் நின்றது என்று சில நேரங்களிலும், எதற்கு நின்றதென்றே தெரியாமல் பல நேரங்களிலும் விழிபிதுங்க செய்யும். பெட்ரோல் பங்கே இல்லாத ரோட்டில் பெட்ரோல் இல்லாமல் நிற்க செய்யும் ; என்டா இப்படி பன்னுறனு பைக்குடனே பேச செய்யும்.


அத்தனையையும் தாண்டி அந்த காரிருள்; வெண்மேகங்களிருந்து வெளிச்சம் தரும் நிலா; ஈரக்காற்று; பகல்பொழுதில் கிடைக்காத நிசப்தம். பூச்சிகளின் மெல்லிசை இவையனைத்தும் அந்த நாளில் நான் பட்ட கஷ்டங்கள், அவமானங்கள்; மனஅழுத்தம்; என்னவளின் வெறுமையென அனைத்தையும் சாகடித்து என்னுள் இருக்கும் என்னை வேறு உலகத்திற்கே அழைத்துச் சென்று நாளைய சவால்களை சந்திக்க கூடிய நல்லவனாக மறுபிறப்பு எடுக்க செய்யும்.

குழந்தையாக இருக்கும் போது எனை தொடையினில் அமர்த்தி ஏக கதைகளை படித்திருப்பார் போல என் அப்பா. கருவறையில் நான் இருக்கும் போது கண்ணில்

பட்டதையெல்லாம் நிச்சயம் ரசித்திருப்பார் போல என் அம்மா; அத்தனையும் அம்மாவின் தொப்புள் கொடியோடும், அப்பாவின் வேர்வைக் கொடியோடும் என் இரத்தத்தோடு கலந்திட்டது போலும். நல்லவை மட்டுமல்ல தீயவையும் நம் தாய் தந்தையாலே கற்பிக்கப்படுகிறது என் நம்புகிறவன் நான்.

அந்த வகையில் நான் நல்லவனாக இருக்க வேண்டும் என்பது நிச்சயம் எனக்காக மட்டும் அல்ல. நல்லவிடயங்களின் மேல் போதை கொள் என்று என்றோ என் அப்பா சொன்னது, இன்றும் என் காதுகளில் கேட்டுக் கொண்டுத்தான் இருக்கிறது. அவர் சொன்ன அந்த போதைகளில் ஒன்று தான் இந்த
இரவுப்பயணம்

- அ.அமர்நாத்



பிரியா
மன்னார்குடி

# வறுமையின் வழிக்காட்டி

கோடி கோடியாய்
கூடிய கூட்டமாய்
வாழ்ந்து வரும் வையகத்தில்

மாடமாளிகை கூட கோபுரம்
கோடி கணக்கில் கூடினும்

வறுமை எனும் கொடுமையாய்
குடிசையின்றி

வானமே கூறையாய்
வையமே வீடாய்

வாழ்ந்து வரும் எளியோர்கள்
பல கோடி

உண்ண உணவின்றி உடுக்க
உடையின்றி

பசி என்னும் பட்டினியில் மண்ணில்
மடிந்திட்ட மானிடரோ பலகோடி

கொள்ளை கொலை கூடிப்போச்சி
கோயில்சிலை காணா போச்சி

நீதி நேர்மை அழிஞ்சி போச்சி
நிம்மதியற்ற வாழ்வு வாழலாட்சி

நாகரிகம் முத்திபோச்சி கலை கலாச்சார
உலகம் களைஞ்சி போச்சி

காடுவனம் அழிஞ்சி போச்சி மழை
பொழிய மறந்து போச்சி

குடிபோதை ஏறிப்போச்சி
குடும்பத்தில் இன்பம் என்பது
இல்லல் ஆட்சி

சூதுவினை சூழலாச்சி
சோம்பேறிக்கு சுதந்திரம் போச்சி

வனப்பயிர் வாடிப்போச்சி வறுமை
நிலை கூடிப்போச்சி

இயற்கை வளம்
அழிஞ்சி போச்சி

இல்லை இல்லை
என்ற சொல் வழக்கமாச்சி

லஞ்ச ஊழல் நிறைந்து போச்சி
ஆக்கவேலை குறைந்து போச்சி

அழிவுவேலை
நிறைந்து போச்சி

வரதட்சனை
வாங்கலாச்சி வாழ்விழந்த

மங்கையரின்
வாழ்க்கை போச்சி

இனப்பெருக்கம் அதிகமாச்சி
விதிப்பயன் கூடிப்போச்சி
அதிகமாச்சி விதிப்பயன் கூடிப்போச்சி

- திருநாவுகரசு
விவசாயி, காளாச்சேரி மேற்கு

# இளையோர் சேவை... இன்றைய தேவை...

இந்த பதிவு எங்கள் ஊர் கீழத்திருப்பாலக்குடியில் நடக்கின்ற, நடந்துகொண்டு இருக்கின்ற செயல். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்பதற்கு ஒரு சான்று..




**கீழத்திருப்பாலக்குடி குட்டை முழுவதுமாக நிரம்பியது**

மன்னார்குடி அருகே கீழத்திருப்பாலக்குடி கிராமத்தில் பெரியவர்களால் முடியாத சில காரியங்களை இளைஞர்கள் சிலர் முன் நின்று நடத்தினர். அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால் இந்த ஊர் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இதற்கு முதல் காரணம் இந்த ஊர் பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் உள்ள குட்டைக்கு தண்ணீர் வரும் குழாய் பழுதடைந்து கடந்த 12 வருடங்களாக தண்ணீர் வராமல் இருந்தது.

இதனால் ஊரின் நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்து 200 அடியை எட்டிவிட்டது...

அதனால் கோவில் காளைகள் என்ற அமைப்பை சேர்ந்த இளைஞர்கள் ஒன்று சேர்ந்து குட்டையை தூர்வாரி, நிறைய போராட்டங்களுக்கு பிறகு இரவு பகலாக புதிதாக குழாய்கள் புதைத்து குட்டைக்கு ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்தனர்.

கிட்டத்தட்ட குழாயின் விலை மட்டும் ரூ.50,000 நெருங்கியது.
அதோடு மட்டும் அல்லாமல் பொக்லைன் எந்திர வாடகை மற்றும் செலவு மேலும் 25000/- தொட்டது.

குட்டைக்கு தண்ணீர் கொண்டு வர ஊரில் உள்ள முக்கியமானவர்கள், அரசியல்வாதிகள், பெரியவர்கள் யாரும் முன்வராததால் இளைஞர்களே இந்த பணியில் இறங்கினர்.




**கீழத்திருப்பாலக்குடி ஆறு இளைஞர்களால் தூர்வாரும் பணி**

பிறகு குட்டை நிரம்பியவுடன் அதன் வடிகால் உதவியுடன் தண்ணீர் ஊர் வழியாக அதாவது அங்கன்வாடி,

பிள்ளையார் கோவில் எதிர்புறம் உள்ள வாய்க்கால் வழியாக இளைஞர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் 100 நாள் வேலைத் திட்டம் மூலம் குளத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அதே சமயம் இந்த ஊரின் வடக்குத் தெரு வழியாக குளத்திற்கு தண்ணீர் செல்லும் வாய்க்கால் பல ஆண்டுகளுக்கு பிறகு இளைஞர்களால் நான்கு நாட்கள் தூர்வாரப்பட்டு குளத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது.




பிறகு குளம் நிரம்பியவுடன் அதன் வடிகால் வழியாக தண்ணீர் ஏரிக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த திட்டத்தை இவர்கள் கையில் எடுக்கும் முன், சென்ற ஆண்டு இந்த ஊரின் நிலத்தடி நீர்மட்டம் 180 அடிக்கு கீழ் இருந்தது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கோடைகாலத்தில் வெயில் மற்றும் வறட்சி அதிகம். இருப்பினும் இந்த நீர் நிலைகளை இவர்கள் சரி செய்ததால் தற்போது வரை நிலத்தடி நீர் மட்டத்தின் அளவு 140 அடிக்கு கீழ் செல்லவில்லை, இதனால் அனைவரது வீட்டின் போர்களிலும் தண்ணீர் இப்போது வரை வருகிறது.

பொது சேவையே எங்கள் அறசேவை என்பது இந்த கோவில் காளைகளின் தாரக மந்திரமாக உள்ளது. உங்கள் சேவை தொடரட்டும்.. வாழ்த்துக்கள்!..

இதே போல் எல்லா ஊர்களிலும் உள்ள இளைஞர்கள் முன்வந்து அவர்களின் ஊரில் உள்ள நீர் நிலைகளை தூர்வாரி மழை நீர் மற்றும் ஆற்று நீர் பாசனத்தை சரியான முறையில் சேகரித்தால் மன்னார்குடி சுற்று வட்டாரப் பகுதிகளை தண்ணீர் பஞ்சத்திலிருந்து காப்பாற்றலாம்.

இதற்குள் எந்த அரசியல் தலைவர்களும் குறுக்கிட வேண்டியதில்லை. ஒவ்வொரு ஊரிலும் உள்ள இளைஞர்கள் முன்வந்து தண்ணீர் பிரச்சனையை தீர்க்க இதுவே ஒரே வழி.

நீங்கள் உங்கள் ஊரில் உள்ள நீர் நிலைகளை சரியாகப் பயன்படுத்தி தண்ணீரை சேமித்தால் கண்டிப்பாக உங்கள் ஊரில் தண்ணீர் பஞ்சம் இருக்காது...

இதே போல் ஒவ்வொரு ஊரிலும் உள்ள இளைஞர்கள் அரசியல்வாதிகளையோ ஊர் பெரியவர்களையோ நாடாமல் நீங்களே முயற்சித்து உங்கள் ஊரில் தண்ணீர் பிரச்சனையை தீர்ப்பீர்கள் என்றால் நாளைய சமுதாயம் இளைஞர்கள் சமுதாயமாக மாறும்.

இதை இளைஞர்கள் எல்லோரும் நம் சுற்றுவட்டார பகுதியில் செய்தால் தமிழ்நாட்டுக்கே முன்னோடியாக மன்னார்குடி பகுதி மாறிவிடும்.

நல்லதை கூறும்போது நல்லவர்கள் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த செயல் உங்கள் பார்வைக்கு.

மழைநீரை சேகரிப்போம்!... வடிகால் மற்றும் நீர்நிலைகளை பராமரிப்போம்!...
மழைநீர் உயிர் நீர்

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

SK. நிருபன்
மன்னார்குடி



# காவிய பகிர்வு

நீலமேகம் புன்னகை துளிர்க்கும்,
கார்மேகம் சிந்தனை தொய்வில்
ஆவல்,
சங்கமம் புணரும் தேடல் வியப்புக்குறி
மறைவில்!

நாட்களது கறை,கரையும்
விடையின் வினா அறிவில்!

தூரத்தில் அழைக்கும்
சின்ன சின்ன வழித்தடம்.
உள்ளூரச் சேரும்
மேடுகள் பதிந்த ஞாபகங்கள்,
பள்ளங்கள் அடர்ந்த வெளிச்சங்கள்

கடக்கும், கடந்த வழியெங்கும்
வழிகள் நிறைய
வலிகள் வலிய நிறையும்

இறைவா! என்றொரு கூக்குரல்
ஆறுதல் மெலிதாய் வந்தடையும்


மனமும் வாசலும் நின்றிருக்க
இலையுதிர் காலம் சந்திக்கும்
தென்றல் ஸ்பரிசம் தொட்டணைக்கும்
கண்கள் ஈரம் மெல்ல காயும்
விரல்கள் எதிரெதிர் உரசும்

இறுதி பிணைப்பில் நகர்வுகள்
மெல்ல சிந்தை சேர்ந்திடும்
நம்மின் அப்பாற் ஒலிக்கும் கீதம்
நடத்தும் காவிய பகிர்வுகள்.

- அஜய் பிரசாத்



S. கீர்த்தனா
பாரதிதாசன் நகர்,
மன்னார்குடி



# வெளிநாடு செல்ல தகுதிகள்

மூனுவேளை மூக்குமுட்ட
சாப்பிடுவதை நிறுத்தனும்;
முதலாவதாய் முக்கால்வாசி சைவத்தை
நீ மறக்கனும்!

பெத்த தாயை திட்டாமல்- உன்
துணியை நீயே துவைக்கனும்;
உப்பு-காரம் தெரியாட்டியும்
தினமும் நீயே சமைக்னும்!

அப்பா வந்து எழுப்பாமல்
அலாரம் வைத்து உறங்கனும்;
அண்ணன் பாக்கெட்டில் எடுக்காமல்
சிக்கனமாக இருக்கனும்!

பேண்ட்-சட்டை இல்லைன்னாலும்
பெர்முடாஸ்-டிசர்ட் உடுத்தனும்;
பேங்க்-ல அக்கவுண்ட்
இல்லைன்னாலும்
ஃபேஸ்புக் அக்கவுண்ட் திறக்கனும்!

அங்கே......

அரபியோட காருக்கு
ஆயில் போட்டு துடைக்கனும்;
அவனுடைய பிள்ளைக்கு சலாம்
போட்டுத் தொலைக்கனும்!

சாதி-மத சேட்டையெல்லாம்
ட்ரங்க் பெட்டிக்குள் அடைக்கனும்;
நாசாவிலே வேலையென்றாலும்
ட்ரம்ப்-க்கு நீ அடங்கனும்!

இந்தி தெரியாமல் போனாலும்
இந்தியன் என்றே சொல்லனும்;
தமிழன்-ற திமிர் இருந்தாலும்
இங்கிலீஷ் கொஞ்சம் பேசனும்!

நண்பர்கள் நிறைய கிடைச்சாலும்
நாசூக்காகப் பழகனும்;
நல்லவனென்று தெரிஞ்சாலும்
கொடுக்கல்-வாங்கலை குறைக்கனும்!

சொந்த-பந்தங்களை நினைக்காமல்
பாச-நேசத்தை மறக்கனும்;
தலைவலி காய்ச்சல் என்றாலும் தாய்
தகப்பனிடம் மறைக்கனும்!

வீடுகட்டி கல்யாணம் கட்ட
ஓவர்டைம் பாக்கனும்;
மயிர் கொட்டும் கவலையை விட்டு
உயிரை மட்டும் காக்கனும்!

மனைவி-மக்கள் நினைவின்றி
மகிழ்ச்சியாக இருக்கனும்;
மாதமானால் சம்பளத்தை மணிகிராம்-ல்
அனுப்பனும்!

வட்டிக்குக் கொடுத்தவனை
திட்டிக்கிட்டே உழைக்கனும்;
எந்த நாட்டுக்குப் போனாலும்-உன்
சொந்த நாட்டை நினைக்கனும்!!!!

இதான் வெளிநாட்டு வாழ்க்கை.

--
**கார்த்திக்**
உள்ளிகோட்டை

# பிரிவினைவாதம் அல்ல, தற்காப்பு வாதம்:



நிரஞ்சன்

தமிழ்நாடு மட்டும் அல்ல, உலகம் முழுக்க ஒவ்வொரு தேசிய இனங்களும் தனக்கான விடுதலையை விரும்ப தொடங்குகிறது. உலகம் முழுக்க அது திட்டமிட்டு சிக்கலாக்கவும் படுகிறது. இனத்தின் அடிப்படையில் தேசம் அமைவதை பன்னாட்டு முதலாளிகளும், அதிகார வர்க்கங்களும் விரும்புவதில்லை. ஏனெனில் இனத்தின் அடிப்படையில் இறையாண்மையுள்ள ஒரு தேசம் அமைந்தால், அந்த இனமும் தேசமும் பாதுகாக்கப்படும் என்பதை நன்கு அறிந்தவர்கள் அவர்கள். தம்மால் அவர்களை சுரண்டுவதில் சிரமம் ஏற்படும் என்ற ஐயம் அவர்களுக்கு உண்டு. அது ஒரு தற்காப்பு அரசியல் முனைப்பு என்ற உண்மை அவர்களுக்கு புரியும். எனவே இனவாதம் என்பது பிரிவினைவாதம் அல்ல. அது தற்காப்பு வாதம்.

மதமோ சாதியோ செயற்கையாக நாம் உருவாக்கிக்கொண்ட வரையறை. ஆனால் இனம் என்பது இயற்கையை அடிப்படையாக கொண்ட வரையறை. தமிழர்கள் என்ற வரையறையை உருவாக்கியது நாம் அல்ல, இயற்கை தான் உருவாக்கியது. தமிழ், தமிழர் என்ற பெயரை மட்டுமே நாம் வைத்தோம். மொழி என்பது புவியியல் சார்ந்து அதன் தட்ப வெப்பம் சார்ந்து  உருவாவதும், மாற்றம் அடைவதும் ஆகும். மொழி மட்டும் அல்ல, மனிதர்களும் சரி, மற்ற ஜீவராசிகளும் சரி, இந்த புவியின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப உடல் அமைப்பும் உடல் மாற்றமும் பெறுகிறார்கள். சிங்கம், புலி, கரடி, மாடு அனைத்து நிலங்களிலும் உண்டு. அனைத்தும் ஒரே மாதிரியான தோற்றத்துடன் இருப்பதில்லை. இப்படிதான் இயற்கை வரையறை செய்கிறது.

எனவே மொழியும் இனமும் அந்த இனத்தவரின் உடலும் இயற்கையை அடிப்படையாக கொண்டது. இயற்கை அனைவரையும் அனைத்து உயிர்களையும் ஒரே மாதிரி படைப்பதும் இல்லை, சமமாக படைப்பதும் இல்லை. ஆனால் சமமாக பாவிக்கிறது. இயற்கையிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியதும் அது தான். அனைவரையும், அனைத்து உயிர்களையும் சமமாக பாவிக்க வேண்டும். ஆனால் நாம் சமமான படைப்புகள் அல்ல என்பதையும் உணர வேண்டும். இயற்கையே தன்னை மலை பகுதியாகவும், காடு பகுதியாகவும், பாலைவனமாகவும், கடலாகவும்  வரையறை செய்திருக்கிறது. ஒரு நிலத்தை வெப்பமாகவும் ஒரு நிலத்தை குளுமையாகவும் வரையறை செய்துள்ளது. எனவே அந்தந்த நிலத்தில் மனிதனும் வரையறுக்கப்பட்டுவிட்டான். வரையறுக்கப்பட்ட மனிதனுக்கு என்று வரையறுக்கப்பட்ட மொழி அடையாளம் ஆகிறது. அவனுகென்று ஒரு பண்பாடு, வழிபாடு, வாழ்வியல், அறிவியல், தத்துவம், பழக்கவழக்கம், பொருளாதாரம், கலைகள்,

இலக்கியம் உருவாகிறது. இவையின் செழிப்பில் தான் அந்த மனிதன் செழிக்கிறான். இவைகள் அனைத்தும் தழைக்க தழைக்க தான் அந்த மனித இனமும் தழைக்கிறது. எனவே இவற்றை பாதுகாக்க ஒரு அரசியலும் ஒரு தேச வரையறையும் நிர்வாகமும் அந்த நிலத்தில் நிலைப்பதும் அவசியமாகிறது.

எனவே தனது வாழ்வியலுக்கென்று ஒரு நிர்வாக வசதியாக நாடு கட்டுகிறோம். தனது குடும்பத்துகாக ஒரு வீடு கட்டுவது போல் தனது இனத்துக்காக ஒரு நாடு கட்டுகிறோம். அவ்வளவு தான். ஒரு வீடு கட்டவேண்டும் என்பது பிரிவினை வாதமா? எப்படி உலக மனிதர்கள் அனைவருக்கும் சேர்த்து ஒரு வீட்டை கட்டுவது என்பது சாத்தியமற்றதோ, அதேபோல் தான் ஒரு நாட்டை கட்டுவதும் சாத்தியமற்றது. எனவே சர்வதேசியம் என்று சொல்வது ஒரு மாயை. நம் குடும்பத்துக்கு என்று ஒரு வீட்டு நிர்வாகம் தேவைப்படுவது போல், நம் இனத்துக்கு என்று ஒரு நாட்டு நிர்வாகம் தேவை. இது பிரிந்து போவது அல்ல, பிரியும் உணர்ச்சி அல்ல. நமக்கென்று ஒரு வீடு இருந்தால் தான் மற்ற வீடுகளுடன் உறவாடலாம், பொண்ணு கொடுக்கலாம், பொண்ணு எடுக்கலாம், சம்பந்தம் போடலாம், உறவு வைத்துகொள்ளலாம். அது தான் கூட்டமைப்பு வாழ்க்கை. அதுபோலவே நமக்கென்று ஒரு நாடு இருந்தால் தான் பிற நாடுகளுடன் வணிகம் செய்யலாம், கொண்டாடலாம், உதவலாம், கூட்டாக ஒரு நிகழ்வு நடத்தலாம், உடன்படிக்கை செய்துகொள்ளலாம், உறவு வைத்துகொள்ளலாம். நம்மை பாதுகாத்தும் கொள்ளலாம்.  இது பிரிவினைவாதம் அல்ல, தற்காப்பு வாதம்.

‘‘பல கலாச்சார காற்றுகள் வந்து செல்லும் வகையில் பல சன்னல்கள் கொண்ட வீட்டையே நான் விரும்புகிறேன்.
ஆனால் இது எதுவோன்றினாலும் எனது வீடு வேரோடு பிடுங்கி எறியப்படுவதை நான் விரும்பவில்லை‘‘ –  மகாத்மா காந்தி

காந்தியடிகள் சொன்னது போல் பல கலாச்சார காற்றுகள் வந்து செல்லலாம். ஆனால் அது எதுவோன்றினாலும் நாம் வேரோடு பிடுங்கி எறியப்பட கூடாது. அதாவது தென்றலை விரும்பலாம். புயலை விரும்ப முடியுமா? எனது நாடும் இனமும் அனைவரையும் வரவேற்கும் தென்றலாக இருக்கும் வரை. புயலாக வரும்போது தற்காத்துகொள்வது அவசியம். பிற இனத்தவர்களை விருந்தாளிகளாக வரவேற்கிறோம். அவர்களே புயலாக மாறி எம்மை ஆள துடிப்பதை எங்களால் ஏற்க முடியாது. புயல் போல வட இந்தியர்கள் திட்டமிட்டு தமிழ்நாட்டில் தினம் தினம்  குடியேற்றுவதை ஏற்க முடியாது. ஏனெனில் எனது வீடு வேரோடு எறியப்படும். இலங்கையில் தமிழர்களை இப்படியான ஒரு புயல் தானே அடித்தது. அடித்துக்கொண்டிருக்கிறது. புயலை விரும்பாத மனம் இயற்கைக்கு எதிரானது என்று சொல்வது எவ்வளவு அபத்தமோ... அதே அளவு அபத்தம் தான் பிறமாநிலத்தவரின் திட்டமிட்ட குடியேற்றத்தை விரும்பாத தமிழர்களை இனவெறியர்கள் என்று சொல்வதும். ஏனெனில் இப்போது  திருடர்கள் வீட்டை உடைத்து திருடுவதில்லை. வீட்டுக்குள் வேலைக்காரனாக சேர்ந்து வீட்டை கொள்ளையடிக்கிறான். ஒரு கட்டத்தில் வீட்டையே தனது வீடு என்கிறான்.

விருந்தாளிகளுக்கு விருந்தோம்பல் செய்யலாம், அன்பு காட்டலாம், பொருளாதார உதவி செய்யலாம், உயிரை கூட கொடுக்கலாம். ஆனால் குடும்ப அட்டையில் பெயர் சேர்க்க முடியுமா? எனவே இது பிற இனத்தவர் மீதான வெறுப்புணர்வு அல்ல. நிர்வாக வசதிக்கான வரம்பு.

தமிழ்தேசியம் என்பது அதிகார வரம்பு தானே தவிர, அன்புக்கான வரம்போ, அரவணைப்புகான வரம்போ, நட்புக்கான வரம்போ அல்ல... இனத்தின் வழியாக தேசத்தை வரையறை செய்தால் அன்பும் நட்பும் இன்னும் கூடுமே தவிர அதற்கு பங்கம் வராது. எனது உயிருக்கு உயிரான நண்பர்களே பலர் பிற இனத்தவர் தான். தமிழ் தேசிய அமைப்புகளில், கட்சிகளில் பிற இனத்தவரும் இணைந்து இருக்கிறார்கள். சட்டமன்ற வேட்பாளாராக பிற இனத்தவர்களை தமிழ்தேசிய கட்சிகள் நிறுத்தியுள்ளது. அவர்களும் இந்த மண்ணை இந்த மண்ணின் மைந்தனே ஆள வேண்டும் என போராடுகிறார்கள்.. ஏனெனில் அவர்களுக்கு தெரியும், நாம் குடியேறிய மண்ணின் மைந்தன் அந்த மண்ணை ஆளும்போது தான் நாம் அங்கு இனிமையான வாழ்வை வாழ முடியுமென்று. சிங்கப்பூர் நாட்டை  லீ குவான் யு ஆளவேண்டும் என்று தான் அங்கு வாழும் தமிழர்கள்  விரும்பினார்கள். பெரியார் கூட தமிழ்நாட்டை நான் ஆட்சி செய்ய கூடாது. மண்ணின் மைந்தன் பச்சை தமிழன் காமராசு தான் ஆள வேண்டும் என்றார். க்யூபா விடுதலை அடைந்த பிறகு அந்த மண்ணின் மைந்தன் பிடல் காஸ்ட்ரோ தான் ஆட்சி செய்தார். பிற இனத்தை சேர்ந்த க்யூபா விடுதலைக்கு பெரிதும் உதவிய சே குவேரா அமைச்சராக மட்டுமே இருந்தார். அவர்கள் இயற்கையின் வழியில் நிற்கிறார்கள். எனவே பிற இனத்தவரிடமும் கேட்டுகொள்கிறேன்.... தமிழ்தேசியத்துகாக பாடுபடுங்கள் என்று.

எனவே  அவர் அவர் நிலத்தை அவரவர் நேசித்தால் சரியாக இருக்கும். அனைத்து நிலங்களும் பாதுகாப்பாகவும் இருக்கும். அனைத்து இனங்களும் சகோதர உணர்வுடன் உறவாடிக்கொள்ளவும் வசதியாய் இருக்கும். கீரையும் தயிரும் சேர்த்து உண்ணும்போது எப்படி செரிக்காதோ, அதுபோன்று தான் பல தேசிய இனங்களை சேர்த்து நிர்வகிக்கும்போது விளங்காது. இந்த உண்மையை உணர்ந்துகொண்டால் தமிழ் தேசியம் உங்களுக்கு பிரிவினைவாதமாக தெரியாது. காஷ்மீர் நிலம் காஷ்மீரிகளுக்கே என்று நீங்களும் முழங்குவீர்கள். செவ்விந்தியர்களுக்காக நிச்சயம் கண்ணீர் விடுவீர்கள். சோமாலியாவுக்கு நடந்த கொடுமை மட்டும் அல்ல, உலகம் முழுக்க நடந்த கொடுமைகள் அனைத்தும்... உலக அரசியல் அனைத்தும் உங்கள் புரிதலுக்கு வரும். இயற்கையை ஒட்டிய வாழ்வை புரிந்துகொண்டவன், இயற்கையின் இயல்பை புரிந்துகொண்டவன், அனைத்து உயிர்களையும் நேசிப்பவன்... இனத்தின் வரையறையை கொண்டே தேசம் அமைப்பான். ஆகவே,  இனவாதம் என்பது பிரிவினைவாதம் அல்ல, தற்காப்பு வாதம்.

தமிழ் தேசிய பேரினம் மட்டும் அல்ல, அனைத்து தேசிய இனங்களும் விடுதலை பெற, தேசம் அடைய வாழ்த்துகள்.

– நிரஞ்சன்

## துளிர்த்து முற்றி

இலையாக வாழ்ந்து
பழுத்துச் சருகாகி
காற்றுக்கு விழ
காத்திருப்பதைப் போல்
காத்திருக்கிறேன் நான்.

வாலிபக் குருதியை
அள்ளிக் குடித்ததின்
அடையாளமாய்
முடிகளில் நரையும்
முகத்தில் முதிர்ச்சியும்
என் தேகத்தில்
எண்ணற்ற சுருக்கங்களும்.
இசை மீட்டி
ஓய்ந்த வீணையின்
தளர்ந்த தந்தி போல்
உடலில் உயிர் ஊசல்.

பால்யத்திலிருந்து
பாடைபல்லக்கில் பவானி
போகும் கணம் வரை
ஒருவழிப்பாதையாய்
கணக்கிட்டுத் திரும்பும்
நினைவலைகள்.
வேரறுத்த நிகழ்வுகளும்
நீரூற்றிய தடங்களும்
விடையின்றி
மனதில் வந்து போகும்.

உள்ளுக்குள் மகிழ்ந்து
மன்னிப்புக் கோரி
மன்றாடிப் புழுங்கியழுது
வெம்பித் தீர்த்தும்
காலனின்
இறுதிக் கணக்கிலிருந்து
எஞ்சுவதில்லை ஒருயிரும்....!

## அவனை காணுகின்ற ஆவல்

எல்லோரிடத்திலும்
மிகுந்து காணப்படுகிறது.
அவன் வரப்போவதான
அறிவிப்புகள் நெடு நாட்களாய்
வந்தவண்ணம் இருக்கின்றன.

நம்மை நெருங்கும்
தொலைவில்
அவன் வந்து விட்டதாகவும்
நெருக்கமான
சகாக்களிடமிருந்து
அதிகாரப்பூர்வமான தகவல்கள்
வந்து கொண்டிருக்கின்றன.
அவன் வருகைக்காக
காத்திருக்கிறோம்
இன்னும் வரவில்லை.

அவன் வந்ததும்
முதலில் பார்ப்பவர்கள்
அவன் குறித்தான
அடையாளங்களை
முதலில் தெரிவியுங்கள்.
அடையாளம் தெரியாமல்
அவன் எங்களைக்
கடந்து விடப் போகிறான்.



**பாரியன்பன் நாகராஜன்,**
82/32 - B,
பிள்ளையார் கோவில் தெரு,
காமாட்சி அம்மன் பேட்டை,
குடியாத்தம் - 632 602
பேச: 9453139353.

# ஏசி கொஞ்சம் யோசி - (பாகம் 2)



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

சென்ற இதழில் ஏசி எப்படி வேலை செய்கிறது என்பதைப் பற்றி பார்த்தோம். இந்த இதழில் வீட்டில் பயன்படுத்தப்படும் ஏசி பற்றிய சில அடிப்படை சந்தேகங்களுக்கான பதில்களைக் கேள்வி பதில் முறையில் பார்ப்போம்.

1.ஏசி ஓடும் போது மின்விசிறியும் போடலாமா??

ஏசியின் set point 25 க்கு மேல் வைத்து விட்டு குறைவான வேகத்தில் மின் விசிறியை இயக்கலாம். ஆனால் ஏசியில் இருந்து குளிர்ந்த காற்று வரும் திசைக்கு எதிர் திசையில் மின் விசிறி இருக்க கூடாது. குறிப்பாக table fan. மற்றபடி அறையில் உயரத்தில் உள்ள ceiling fan போடுவதில் தவறில்லை. சிலர் சொல்வார்கள் அப்படி செய்தால் தூசு அதிகம் ac unitல போய் விடும் என்று. அப்படிப்பார்க்கப் போனா, ஏசி அறையில் fan இருக்கவே கூடாது. ஏசி அணைக்கப்பட்ட நிலையில் மின்விசிறி இயங்கினாலும் தூசு ஏறும். ஏசியின் உள்ளே தூசு வடிக்கட்டி ஒன்று இருக்கும் (filter). அதை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். அது போல தேவைப்படும் போது unitக்கு உள்ளேயும் தூசுக்களை சுத்தம் செய்யவேண்டும். இது மின் விசிறி ஓடினாலும் அல்லது ஓடா விட்டாலும் நடக்கும் செயல். எனவே மின் விசிறியை இயக்கலாம். இன்னும் சொல்லப்போனால் setpoint $26^0$ல வச்சுக்கிட்டு மின்விசிறியையும் இயக்கினால், நீண்ட நேரம் ஏசி ஓடினாலும் பெரிய அளவில் மின்சாரம் தேவைப்படாது. மாறாக 18Kல ac setpoint வைத்து விட்டு மின் விசிறியையும் இயக்குவது மின்சாரம் விரயம் ஆகும். நம் உடலும் குளிர் தாங்காது.

2.சரியான setpoint எது?

நம் உடலுக்கு ஏற்ற குறைந்தபட்ச வெப்பநிலை $23^0$. அதற்கு கீழ் அறை வெப்பநிலை இருக்க கூடாது.

3.நமது ஏசி ரிமோட் ல நாம் set செய்யும் வெப்பநிலையின் அர்த்தம் என்ன??

அது நம் அறையில் வெப்பநிலையை குறிக்கும். உதாரணமாக $20^0$ set பண்ணா, அறையின் வெப்பநிலை $20^0$ல இருக்க வேண்டும் என்று பொருள். அறையில் வெப்பநிலையை கணிக்கும் ஒரு வெப்பமானி நம் அறையில் இருக்கும் ஏசிப்

பெட்டியில் இருக்கும். அதுவே நம் அறை வெப்பநிலையை கட்டுக்குள் வைத்து இருக்க உதவும்.

4.மிக விரைவாக அறை குளிராக 16$^0$ல set point வைக்கலாமா??
அறை விரைவாக குளிர வேண்டுமானால் சுற்றுப்புற வெப்ப நிலை குறைவாக இருக்க வேண்டும். சுற்றுப்புற வெப்பநிலை 45$^0$யில் இருக்கும் போது, நிச்சயம் அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். மேலும் ஒவ்வொரு degreeயாத்தான் குறையும். 18$^0$ல வச்சா உடனே 18$^0$வராது. மாறாக unit fan வேகத்தை அதிகமாக்கினால் விரைந்து குளிர்ச்சி ஆகும்.

5.ஒரு அறைக்கு எத்தனை டன் (tonnage) ஏசி வேண்டும் என்பதை எப்படி தீர்மானிப்பது??

ஏசியின் அலகு டன் என்பார்கள்.
1 டன் என்பது = 12000 btu (british thermal unit)
ஒரு சதுர அடி பரப்பை குளிர்விக்க (குறைந்த பட்சம்) = 60 btu
200 சதுர அடி பகுதிக்கு = 12000 btu
அதாவது 1 டன் ஏசி என்பது அதிகபட்சம் 200 சதுர அடி அறையை குளிர்விக்கும்.

ஆனால் சுற்றுப்புற வெப்பநிலை, அறை இருக்கும் அடுக்கு (மேல் மாடி), சூரிய ஒளி உள்ளே வரும் அளவு (கண்ணாடி கதவு), அறையின் உள்ளே வெப்பத்தை உமிழும் சாதனங்கள் இருப்பது, இவற்றைப் பொருத்து இன்னும் அதிகம் ஆகும்.

இன்றைய சூழலில் 1.5 டன் ஏசியை 200 சதுர அடி முதல் 300 சதுர அடி வரை அறைகளுக்கு தேர்வு செய்யலாம். 200 சதுர அடிக்கும் குறைவான அறைகளில் 1 டன் ஏசியை தேர்வு செய்யலாம்.

6.ஏசி எவ்வளவு மின்சாரம் எடுக்கும்??

இதில் நெறைய கணக்கீடுகள் உள்ளன.ஆனால் எளிதில் ஞாபகம் வைத்து கொள்ள வேண்டுமென்றால் 1 டன் ஏசி என்பது தோராயமாக 1kw மின்சாரம் என்று எடுத்துக் கொள்ளலாம். 1kw மின்சாரம் தொடர்ந்து 1 மணி நேரம் இயங்கினால் ஒரு unit.

1 யூனிட் = 1 kw/r.

எனவே ஒரு டன் ஏசி ஒரு மணி நேரம் தொடர்ந்து ஓடினால் ஒரு யூனிட் மின்சாரம் ஆகும். அதுவே 1.5 டன் எனில் 3/4 மணி நேரம் ஓடினால் 1 யூனிட் ஆகும்.

ஆனால் ஏசியை பொறுத்தவரை அதில் உள்ள compressor தொடர்ந்து ஓடினால் மட்டுமே இந்த கணக்கு. ஏன் என்றால் அதிக சக்தி உள்ள மோட்டார் compressorல தான் இருக்கும். நம் அறையில் உள்ள ac unitல உள்ள fan என்பது சாதாரண மின் விசிறி போல் தான் 80w இருக்கும்.

எனவே தொடர்ந்து compressor ஓடினால் மட்டுமே இந்த கணக்கு. பொதுவாக நாம் வைக்கும் விருப்ப வெப்பநிலையை நம் அறை அடைந்து விட்டால், compressor தன் இயக்கத்தை நிறுத்தி விடும். பின் மீண்டும் அறை வெப்பநிலை நம் விருப்ப வெப்பநிலையை விட $1^0$ ஏறும் போது மீண்டும் இயங்கி $1^0$யை குறைத்து விட்டு பின் மீண்டும் நின்று விடும். உதாரணமாக 24Kset point எனில், அறையின் வெப்பநிலை $24^0$ வந்தவுடன் compressor இயக்கத்தை நிறுத்தி விடும். இதனால் அறை வெப்பநிலை மீண்டும் ஏறத்தொடங்கும். $25^0$ போனவுடன் மீண்டும் compressor இயங்கி $1^0$ குறைத்து $24^0$ க்கு கொண்டு வரும். இது தொடர்ந்து நடக்கும்.

இப்படி நம் விருப்ப வெப்பநிலையை ஒருமுறை அறை அடைந்த பின் நம் கணக்கீடு என்பது வேறு. அதன் பின் ஏசி 2 மணி நேரம் ஓடினால் அதில் 1 மணி நேரம் தாம் compressor operating நேரம் என எடுத்து கொள்ளலாம். அப்ப 2 மணி நேரம் 1 டன் ஏசி ஓடும் போது அது 1 யூனிட் மின்சாரமாக எடுத்துக் கொள்ளப்படும். அதிலும் மோட்டார் starting current கொஞ்சம் அதிகம் எடுக்கும். எனவே அதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

7.Inveter ac என்பது என்ன?? அது எப்படி மற்ற ச்ஞ் யை விட குறைவான மின்சாரத்தை மட்டும் எடுத்து கொள்கிறது??

முதலில் inverter என்றால் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக நம் வீடுகளுக்கு alternate current தான் வரும். அதை direct current ஆக மாற்றுவது converter, charger, capacitor, battery போன்ற சாதனங்கள். ஆனால் inverter என்பது alternate currentஐ dcயாக மாற்றி வைத்து கொண்டு அதை மீண்டும் alternate current ஆக வெளியிடும்.

இதனால் தான் நம் வீடுகளில் மின்சார பாதிப்பு ஏற்படும் போது சேமித்து வைத்த மின்சாரத்தை மீண்டும் alternate current மின்சாரமாக வழங்கும்.

Inverter ac ன்னா என்ன??

பலர் நினைக்கலாம், ஒருவேளை மின்சாரம் இல்லாத போது inverter மூலம் ஏசியை இயக்குவது தான் inverter ac என்று. அது இல்லை.

சாதா ஏசியில் compressor ஐ இயக்கும் மோட்டார் ஒரே வேகத்தில் இருக்கும். அதாவது அதனுடைய frequency மாறாது. 50hz அல்லது 60hzல தொடர்ந்து இயங்கும்.

ஆனால் inverter acயில், அறை வெப்பநிலையை பொறுத்து மோட்டார் வேகத்தை மாற்றி அமைக்கும் VFD (variable frequency drive) என்னும் சாதனம் inverter மூலம் இயக்கப்படும். இது மோட்டார் வேகத்தை frequencyயை மாற்றி அமைப்பதன் மூலம் வேகத்தை மாற்றி அமைக்கிறது. உதாரணமாக 50hzல இயங்கும் ஒரு மோட்டார் திடீரென 30hzக்கு மாறும் போது  வேகம் குறையும்.

இப்படி செய்வதால் என்ன பயன்??

எப்போதுமே ஒரே வேகத்துல இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாம் வேகமாக ஓடிக்கொண்டு இருக்கிறோம், நம் இருப்பிடம் அருகில் வந்து விட்டது தெரிகிறது, உடனே நம் வேகத்தை குறைத்து கொண்டு வீடு போய் சேரும் போது முழு வேகத்தையும் குறைத்து கொள்வோம். இப்படி செய்வது நம் உடலின் சக்தியை மிச்சப்படுத்தும். மாறாக ஒரே வேகத்தில் ஓடி திடீரென நம் வீட்டு வாசலில் நிற்பது அதிகப்படியான சக்தியை வீண் அடிக்கும்.

இதே கொள்கை தான் ஏசிக்கும்.
$24^0$விருப்ப அறை வெப்பநிலையை வைக்கிறோம். தற்போது அறை வெப்பநிலை $36^0$ஆக உள்ளது. இப்போது inverter ac முழு வேகத்தில் இயங்கும் (50hz frequency), ஆனால் போகப்போக அறை வெப்பநிலை குறைய குறைய மோட்டார் வேகம் குறைக்கப்படும். $28^0$ வரும் போது 50hz என்பது 40hz ஆகலாம். மேலும் அது $26^0$வரும் போது 30hz ஆகலாம்.

25ஓ ஆகும் போது 20hz ஆகும். இவ்வாறு படிப்படியாக மோட்டார் வேகம் குறைக்கப்படுகிறது. பின் வழக்கம் போல் நம் விருப்ப வெப்பநிலை $24^0$ வரும் போது முழுவதும் நின்று விடும். பின் மீண்டும் $25^0$ அறை வெப்பநிலை சென்றவுடன், சாதாரண acயில் compressor motor முழு வேகத்தில் இயங்கி $1^0$ வெப்பநிலையை குறைக்கும். ஆனால் inverter ஏசியில் அந்த 1ஓயை குறைக்க  குறைவான வேகத்துல இயங்கும்.

இதனால் சக்தி சேமிக்கப்படும். மின்சாரம் குறையும். ஆனால் நீண்ட நேரம் ஏசி இயங்கும் போது தான் அந்த வித்தியாசம் நமக்கு தெரியும். 1 அல்லது இரண்டு மணி நேரம் மட்டுமே ஏசி இயங்கும் போது பெரிய அளவில் இரண்டுக்கும் மின்சார வித்தியாசம் இருக்காது.

8. Inverter acயினால் உண்டாகும் தீமை என்ன??

தீமை என்று எதுவும் இல்லை. ஆனால் அடிக்கடி compressor தன் வேகத்தை குறைத்து கொள்வதால் நம்மால் தொடர்ச்சியாக ஒரே குளுமையான காற்றை உணர முடியாது. எனவே கடும் கோடையில் அது நமக்கு பாதிப்பாக தெரியும் (விருப்ப வெப்பநிலையை அடையும் வரை).

நன்றி.

## - மன்னை செந்தில் பக்கிரிசாமி



**செ. நந்தா**

பாரதிதாசன் நகர்,
மன்னார்குடி



# வரலாற்றின் சுவடுகளில் மன்னார்குடி (பகுதி 6)

## கைலாசநாதர் கோவில் - ஓர் வரலாற்றுப் பெட்டகம் :

மன்னார்குடி புதுப்பாலம் பகுதியில் அமைந்திருக்கும் கைலாசநாதர் கோவில் சோழர் காலத்திய திருக்கோவில் ஆகும். இக்கோவிலின் கல்வெட்டுகளில் 'ஸ்ரீ கயிலாசமுடையாரான ராஜாதிராஜீசுவரமுடையார் திருக்கோவில்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திருக்கோவிலில் 'விரதம் முடித்த பெருமாள்' என்ற பெயரில் ஒரு திருமேனி (சிலை) இருந்ததையும், அந்த திருமேனியை எழுந்தருள செய்வதற்கு நிலம் இறையிலியாக வழங்கப்பட்டதையும், இக்கோவிலில் உள்ள கி.பி.1226ம் ஆண்டு சுந்தர பாண்டியரின் கல்வெட்டு ஒன்று குறிப்பிடப்படுகிறது.

இந்த கோவிலில் ஒரு நீராட்டு மண்டபம் இருந்துள்ளது. அந்த நீராட்டு மண்டபம் 'இளான்குடி உடையான் நாராயண தேவனான பல்லவராயன் திருமண்டபம்' என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் அனைத்தும் இந்த திருக்கோவிலில் உள்ள வீரபாண்டியன் காலத்து கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது.

போசள அரசன் வீரசோமேஸ்வரனின் மகாபிராதினிகளில் ஒருவரும், போசள படைத்தளபதியும் ஆன, 'சாத்தனுடையார் தேவன் திருவேகம்பமுடையான் கம்பய தண்டநாயகன்' என்பவர் இத்திருக்கோயிலில் உள்ள அம்மன் சந்நிதியை கட்டியுள்ளார். இந்த அம்மனின் பெயர் 'காமக்கோட்டத்து பெரிய நாச்சியார்' என்று கல்வெட்டுகளில் குறிப்புகள் உள்ளன. இந்த காமக்கோட்டத்து பெரிய நாச்சியாருக்கு, மன்னார்குடி ஊர் சபையினர், ஊருக்கு பொதுவான நிலத்தில் 10 மா நிலத்தினை வரி நீக்கி அளித்த செய்தி, இந்த கோவிலில் வடக்கு பிரகார போசளர் கல்வெட்டுகளில் உள்ளது.

பாண்டிய நாட்டு திருப்புல்லாணி என்னும் ஊரினை சேர்ந்த 'ஓவாத பாண்டி தேவரடிகள்' என்பவர், இந்த திருக்கோவிலில் அருளும் இறைவன் மற்றும் இறைவியின் வழிப்பாட்டு செலவினங்களுக்காக நிலம் வாங்கி வழங்கிய செய்தி உள்ள கல்வெட்டு ஒன்று இக்கோவிலில் உள்ளது. இந்த கல்வெட்டு பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டு. கல்வெட்டின் காலம் கி.பி. 1343. இக்கல்வெட்டு கூறும் தகவல்கள் யாதென்றால், ஓவாத பாண்டி தேவரடிகள், இராஜாதிராஜசேரியினை (இது பட்டர்கள் வாழும் அக்ரகாரமாக இருக்கலாம்) சேர்ந்த ஆவிக்கொன்றை நம்பிரான் பட்டனின் மனைவியான செல்வப் பெண்ஞானி என்பவரிடம் இருந்து, நிலத்தினை விலைக்கு வாங்கி, அதை கோவிலுக்கு அளித்துள்ளார். அந்த கல்வெட்டில் அந்த நிலத்தினைக் குறித்த பல்வேறு தகவல்கள் கிடைக்கின்றன. அவை பின்வருமாறு :
அந்த நிலத்தின் அளவு - 2 மா.
விலை - 60 பணம்.
விற்றவர் - ஆவிக்கொன்றை நம்பிரான் பட்டன் மனைவி செல்வப் பெண்ஞானி.
வாங்கியவர் - ஓவாத பாண்டி தேவரடிகள்.

நிலம் உள்ள ஊர் - தில்லைநாயக நல்லூர் (மன்னார்குடியுள் அமைந்த சிறு கிராமமாக இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து).
நிலத்தின் எல்லைகள் - இராசராசவதி (வாய்க்கால்), வீரநாராயண வாய்க்கால், சோழகுலமாணிக்கவதி (வாய்க்கால்), கேரளாந்தக வாய்க்கால் ஆகிய வாய்க்கால் மற்றும் வடிகால்கள்.
இவ்வளவு தகவலும் கோவிலுக்கு வழங்கப்பட்ட ஒரு நிலத்தினை குறித்து தெளிவாக கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளன.

கைலாசநாதர் கோவிலில் உள்ள ஆலால சுந்தரப் பெருமாளின் வழிபாட்டிற்கும், திருப்பணிக்கும், நம் ஊரில் இருந்த வரி இல்லா நிலத்தில் இருந்து, ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் வழங்கப்பட்டு, அதிலிருந்து 448 கலம் நெல் வருவாய் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருந்த தகவல் உள்ள, 13ம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றும் இக்கோவிலில் காணப்படுகிறது.

இன்னும் பல கல்வெட்டுகளும் இத்திருக்கோயிலில் காணக்கிடைக்கின்றன.

இவ்வாறாக, கைலாசநாதர் கோவில் கல்வெட்டுகள் ஓர் வரலாற்றுப் பெட்டகமாக திகழ்கிறது.

மன்னையின் வரலாறு தொடரும்...!

தகவல் உதவி: திருவாரூர் மாவட்டத் தொல்லியல் வரலாறு.
South Indian Inscriptions Vol 6 : Inscription Nos. 49, 52, 53, 54, 55.



எழுத்தாக்கம் :
அபிராமி பாஸ்கரன்




SJ. ராஷ்மிகா
பாரதிதாசன் நகர், மன்னார்குடி




S. நந்தினி
பாரதிதாசன் நகர், மன்னார்குடி

# புதிய பயணம்


திருச்சி பார்த்தி

மூன்று மலைகளை ஒரேநாளில் அனைவரும் ஏறிகடந்தனர். சில காலம் முதுவர்களுடன் பழகிதிரிந்ததால், அரிமிதயனுக்கும், நாகந்தைக்கும் மலையேற்றம் அவ்வளவு கடுமையானதாய் தெரியவில்லை, ஆங்காங்கே ஊற்றுநீர் இருந்ததால் தண்ணீருக்கும் அங்கு பஞ்சமில்லை, வழியில் கிடைத்த உணவுகளுடன் பயணம் மேற்கொண்டனர்.
வெயில்களைப்புடன் நண்பகலில் ஓர் ஊற்றருகே அமர்ந்தனர். ஓர் இளம்முதுவன் அவர்களை சிறிது காத்திருக்க சொல்லி வெளியேறினான்.

வெளியேறியவன் சிறிது தூரம் நடந்தான். அங்கே உயரமான ஓர்மலைக்கரடில் நாழள் மலர் கூட்டமாய் மலர்ந்திருந்தது. அதனருகே பிரம்மாண்டமாய் தேன்கூடு இருந்தது, நாழள் மழர் தேனுக்கு இயற்கையிலேயே ருசி அதிகம், விருவிருவென சுளுந்து குச்சிகளால் தீயை மூட்டி ஒரு கல்லுடன் துணியை இருக்கி கட்டி, அதில் தீயை பரவச்செய்து, பின் குறிபார்த்து எரிய தேனடை பிய்ந்து விழுந்தது. அதை லாவகமாய் பிடித்தான், தேனிக்களை அருகேகிடந்த புகைமூட்டியால் விரட்டி, தன்னுடன் கொண்டுவந்த பெரிய சுரைக்குடுவையில் தேனடையை பிழிந்து தேனை நிரப்பினான். வரும்வழியில் நன்னாரி வேர் நிறைய தென்பட அதனை வெட்டி சேகரித்து கொண்டு. அதனை சுத்தம் செய்து பிழிய, கமகமக்கும் நன்னாரி சாறு கிடைத்தது, அதனை மற்றோர் குடுவையில் சேகரித்து விறுவிறுவென நடந்து காத்திருப்பவர்களின் அருகே வந்து சேர்ந்தான்.

இளமுதுவனால் சிறிது நேரபயணம் தடைபட்டிருந்தது, அந்த சிறு இடைவெளியில் அனைவரும் உறங்கியிருந்தனர்.
முதுவனோ
ஊற்றின் குழுமையான நீரை மேலோட்டமாக எடுத்து, அதில் நன்னாரி சாறை கலந்து,தேனை சரிவிகிதத்தில் கலந்து, அருகேவிளைந்த யானைவிரும்பியுண்ணும் எலுமிச்சைபுல்லையும் கிள்ளி அதனையும் பிழிந்து ஒன்றாக்கி, புதுமையான பானத்தை உருவாக்கியிருந்தான்,

பின் அனைவரையும் எழுப்பி பருககொடுத்தான். அக்கூழ்மத்தை அருந்தியதும் களைத்துப்போன அனைவரின் உடலும் புத்துணர்ச்சியடைந்தது, பின் தொடர்ச்சியாய் நடந்தனர்.

## ஆபத்தான பயணம்:

கிட்டத்தட்ட இருநாட்கள் பயணித்து செஞ்சாத்து(கல்வராயன்மலை)மலைக்கும், பளியா(சேர்வராயன் மலை)மலைக்கும் இடைப்பட்ட சிகரப்பகுதிக்கு வந்தடைந்தனர். அங்குள்ள செங்குத்தான வழுக்குப்பாறையை ஏறிச்சென்றால்தான் பளியர்களை காணமுடியும், எளிதாக அவ்விடத்தை சென்றுவர ஓர்இடம் உண்டு, ஆனால் அவ்விடத்தை பளியர்கள் யாருக்கும் அடையாளம் காட்டுவதில்லை, அவ்வழியேதான் யானைகளை பிடித்து,பழக்கி கீழேயுள்ள யானைத்தாவடிக்கு சென்று அவற்றை விற்று தமக்குதேவையானதை வாங்கிக்கொள்ளும் வழக்கம் பளியருக்கு உண்டு. இந்த வழித்தடத்திற்கு அவர்கள் பழையாள் பாதை என பெயரிட்டு அழைத்தனர். தங்களின் மூத்தோள் இவ்வழியே வந்து தமக்கு செல்வங்களை வழங்குவதாய் பளியர்கள் நம்பினர். அவ்வழியெங்கும் பெண்தெய்வத்திற்கு உள்ளகூறுகளை செதுக்கியும் குகைத்தளத்தில் வரைந்தும் வைத்திருந்தனர். இவ்வழக்கம் நீண்டகாலமாய் இருந்துவந்தது.

ஆகவே, இவ்விடங்களை வெளியாட்களுக்கு கூறாமல் மறைத்து வைத்திருந்தனர். மீறிவர முயற்சித்தவர்கள் சரியானபாதை தெரியாமல் வனவிலங்குகளால் உயிரிழக்கவே அவ்வழியே செல்ல முயற்ச்சிப்பதில்லை.

அரிமிதையன் அந்த செங்குத்து பாறையை கண்டு திகைத்தான் கிட்டத்தட்ட 200 அடி உயரமுள்ள உயரமான பகுதி அது, 50 அடி உயரம் ஏறினால் ஒரு சிறிய குகைத்தளம் வரும். அதில் சிறிது இளைப்பாறினால் 150 அடி உயரத்தில் பாறையை பிளந்து ஓர் புங்கை மரம் வேர்விட்டிருந்தது, அதனைபிடித்து ஏறினால் மேலேயேறிவிடலாம். ஆனால் இவ்வாறு ஏறும்போது புதிதாக ஏறுவோர் கீழே கண்டால் அடியில் பாதாளம் தெரியும், அவ்வுளவுதான் இதயதுடிப்பு எகிறி உள்ளம் பயம் கொள்ள ஆரம்பிக்கும், கால் பாதம் இயற்கையாகவே வியர்க்க ஆரம்பித்துவிடும். பின் பாறை விழிம்பு பிடித்து ஏறினால் வழுக்கி கீழே விழவேண்டியதுதான்.

அனுபவசாலியான பெரியவரான முதுவன் முதலில் ஏற ஆரம்பித்தார். மற்றவர்களை காத்திருக்கச் சொல்லிவிட்டு முதலில் தான் மேலேயேறினார்.

சிதைந்த பாறைகளை பிடித்தவாறு மெல்ல மெல்ல மேலே ஏறினார். சென்ற முறை வந்தபொழுது கால் உள்ளே நுழையுமாறு சிறுசிறு குழிகளை வெட்டியிருந்தார், ஆனால் பெருமழை பொழிந்ததால் அவ்விடங்களில் பாசி படர்ந்தது, ஆகவே அந்தரத்தில் இருந்தவாறே இளமுதுவனுக்கு குறள் கொடுத்து சிறு ஆயுதங்களையும், கத்தியையும் எடுத்துவருமாறு கூற அவனும் ஏறிவந்தான், பின் இருவரும் மாறிமாறி அந்தகுழிகளை சுத்தம் செய்து பாசிகளை அகற்றினர். பின் இளமுதுவனை கீழே பத்திரமாய் இருவரையும் அழைத்துவர அனுப்பினார். அதற்குள் அந்த பெரியவர் குகைக்குள் லாவகமாய் ஏறினார். கீழே குரல்கொடுக்க முதலில் அரிமிதையன் ஏறினான்,

குழிகளுக்குள் கால் வைத்து லாவகமாய் ஏறினான். கிட்டத்தட்ட குகைக்குள் நெருங்கும் வேளையில் கடைசிகுழியில் கால்வைத்தான், ஆனால் அங்கு நாள்பட்டபாசி முழுவதும் வெளியேறாமல் இருந்தது, கால்வைத்ததும் ஒருகால் வழுக்க முட்டிதேய்ந்து கீழே விழபோனான், ஒருகால் அந்தரத்தில் தொங்க இடதுகை, இடதுகாலில் வலுவைக்கூட்டி பிடித்தான், வலதுகால் தன்னிச்சையாக நடுங்கத்தொடங்க, கீழேயிருந்து அந்நிகழ்வைக்கண்ட நாகந்தை புயலைவிடவேகமாய் சீறி விறுவிறுவென அன்னிச்சையாக சில நிமிடங்களிலேயே அரிமிதயனுக்கு மேலே நின்று ஒரு கையை பற்றினான், அதற்குமேலே முதுவன் நாகந்தையின் காலை பற்றியிருந்தான். அரிமிதனுக்கு கீழே இளமுதுவனும் ஊன்றியகாலினை அழுத்திப்பிடித்தான். இவையாவும் சில நிமிடங்களிலேயே நடந்துமுடிந்தது, அரிமிதயனுக்கு ஓர் ஆபத்து என்றதும், தன்உயிரை பற்றி எள்ளளவும் நினைக்காது, தன் தலைவன் உயிரையே பெரிதும் மதித்ததாலேயே அவ்வாறு நாகந்தையால் வேகமாய் மலையேற முடிந்தது. அவனாலேயே அதை நம்பமுடியவில்லை.

அவனின் செயலை கண்டு அரிமிதையன் நீண்ட நேரம் ஆனந்தக்கண்ணீர் வடித்தான். தன் உற்ற நண்பனை நீண்டநேரம் முழுஉடலும் தழுவ நெகிழ்ச்சியாய் கட்டியணைத்தான். அந்த தழுவலில் அவனது பரிபூரண அன்பை நாகந்தையும் உணர்ந்தான்.

பின் ஒருவாறு அந்த குகைத்தளத்தில் அனைவரும் ஆசுவாசப்படுத்திவிட்டு புங்கைமர வேரைபிடித்து மெல்ல மெல்ல மேலேயேறினர், முதுவன் கீழேபார்க்க வேண்டாம் என கத்திக்கொண்டே முன்னேறினான். மனிதமனம் விசித்திரமானதுதானே! எதையொருவன் செய்யாதே என்கிறானோ, அதைதானே சிந்திக்கும்! அவ்வாறுதானே நாகந்தையும்!, அவன் மட்டுமென்ன விதிவிலக்கா? கீழேபார்த்தான் அவன். அந்தரத்தில் உண்மையில் நால்வரும் தொங்கிக்கொண்டிருந்தனர். காலையில் வரும்பொழுது ஏறிவந்தமலைகள் சிறுசிறு எழந்தைப்பழம்போல் காட்சியளித்தது. யானைக்கூட்டம் நடந்துசெல்ல அது எறும்பினும் சிறிய தோற்றமளித்தது. வாயில் எச்சிலூறியது, நடுக்கம் தலைக்கேறியது. மெல்ல மெல்ல அவனை ஆசுவாசப்படுத்தினான் இளமுதுவன்.

இன்னும் நூறுஅடிக்குமேல் இவ்வாறுதான் ஏறவேண்டும், சிறிதுதூரம் சென்றதும் வேர் மறைந்து,மரத்தின் உடலை பிடித்தவாறு, ஊர்ந்து ஊர்ந்துதான் மரத்தின் உறுப்பை கட்டிப்பிடித்தவாறு செல்லவேண்டும். இந்த நினைப்பே அரிமிதையனுக்கும், நாகந்தைக்கும் கிலியை ஏற்படுத்தியது.

பின் ஒருவாறு 4 மணிநேரம் ஊர்ந்து சென்று கிட்டத்தட்ட நெருங்கிவிட்டனர், தலைக்குமேல் 10 அடியில் வேறொரு உலகம் அனைவரையும் அழைத்தது. கடைசியில் அப்பகுதியில் வந்தேவிட்டனர். கீழே எட்டிபார்த்தனர், மேகம் முற்றிலும் அவர்கள் கடந்துவந்த மலைகளை மறைத்திருந்தது.

அருகே விளாம்பழம் கிடைக்க பசியாறிக்கொண்டு நடந்து சென்றனர். முன்னேறிச் சென்ற அரிமிதையனும், நாகந்தையும் பொத்தென மிகப்பெரும் குழியில் விழுந்தனர். சுதாரித்த இருமுதுவன்களும் பின்னேற, மிகப்பெரும் மாமிசமலையொன்று பிளிறிக்கொண்டே ஓடி வந்தது. அதன் பின்னே அம்பெய்தியவாறு ஐவர் எண்ணிக்கை கொண்ட பளியர் கூட்டமொன்று துரத்திவந்தது.

15அடி ஆழமும் 30 அடி அகலமும் கொண்ட பெருங்குழி அது. விழுந்ததும் இருவரும் யூகித்தனர் இது யானையை பிடிக்கும் குழியென்று. அவர்கள் பேசிக்கொள்ள நேரம் கொடுக்காதவாறு பிளிறல் சத்தம் மிக அருகே கேட்டது, விபரீதத்தை உணர்ந்து இருவரும் ஆளுக்கொரு எதிரெதிர் மூலையில் முதுகையணைத்து பிடித்தவாறு குழியில் ஒட்டிக்கொண்டர். பெரும்பிளிறலுடன் குப்புற கவிழ்ந்து, குழியில் விழுந்தது ஓர் பெரும் யானை, அகன்ற இருதந்தங்களுக்கிடையே மாட்டிக்கொண்டான், அரிமிதையன். நாகந்தையோ பிடிக்க வழியின்றி கீழே கவிழ்ந்த யானை மீதே தானும் கவிழ்ந்தான். பெரும்புழுதி புகை அங்கு சூழ்ந்திருந்தது.

மிரட்சிகொண்ட விழிகளுடன் இருமுதுவன்களும் குழியை நோக்கி ஓடினர்.

--

திருச்சி சாரதி

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

+91 8220567322

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

Thiravukolmagazine